நம்வழி வேளாண்மை

பருவம் 28 அக்டோபர் – டிசம்பர் 2018 இதழ் 3

ஜூன் 2018 ல் சிருஷ்டி நிறுவனத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் சிருஷ்டி சன்மான் விருது வழங்கும் விழாவில் பல கண்டுபிடிப்பாளர்கள் கௌரவப்படுத்தப்பட்டனர்.

இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம் வழி வேளாண்மை

பருவம் 28 அக்டோபர் – டிசம்பர் 2018 இதழ் 3

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee, A.E.S.Boys Hostel Campus, Near Gujarat University Library & SBI Bank,
Navrangapura. Ahmedabad-380 009.
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

பாரம்பரிய அறிவும் பல்லுயிர் பன்மயமும்

தாவரங்கள், விலங்குகளைப்பற்றிய பயன்பாடு அல்லது நமது பாரம்பரிய அறிவு நம்மிடையே இல்லாமல் பல்லுயிர் பன்மயத்தைப் பாதுகாப்பது அரிது. சிலர் பல்லுயிர் பன்மயத்தைப் பாதுகாக்க முற்றிலும் மனித நடமாட்டம் இல்லாத காப்புபகுதி என செய்து பார்க்கும் முறையை கூறுகின்றனர். ஆனால் ஒரு தாவரம் அல்லது மூலிகைச் செடியின் உபயோகம் பற்றி தெரிந்து கொள்ளாமல் வெறுமனே பாதுகாப்பது நடைமுறையில் சாத்தியமில்லை. அதே சமயம் ஒவ்வொரு மூலிகைச் செடியினை பயன்படுத்தும் விதம் எந்த பகுதியை அறுவடை செய்து எங்ஙனம் உபயோகப்படுத்துகிறோம் என்பது முக்கியம். எந்தெந்த நேரத்தில் எப்படி அறுவடை செய்யலாம் என்ற பாரம்பரிய விதிமுறைகள், கலாச்சாரம் எல்லாம் நமது பல்லுயிர் பன்மயத்தை காப்பதற்காகவே என்றால் மிகையாகாது. உதாரணமாக காராம்பசுவின் பால் ஏன் மகத்துவமானது என்ற அறிவில்லாமல் இது போன்ற நாட்டு பசுக்களை எங்ஙனம் யார் காப்பது. மூலிகைச்செடிகளை ஏன் சில தினங்களில் மட்டும் பகல் பொழுதில் மட்டும் பறிக்க வேண்டும் என்ற பாரம்பரியத்தை தெரிந்து கொள்ளாமலிருந்தால் அதிக அளவில் அழியும் வாய்ப்பு உண்டல்லவா. தாவரவர்க்கங்கள் அனைத்தும் பூமியை ஆதாரமாகக் கொண்டு வளர்கின்றன. அதாவது அவை பூமியின் பிள்ளைகள். பூமிக்கு மதிப்பு கொடுக்கும் சிலர் காலணி அணியாமல் இருப்போரும் உண்டு. ஒரு முறை மூலிகைத் தயாரிப்புகள் பற்றி பயிற்சியில் பங்கு கொண்டு பயில வந்த மாணவர்களை சில மூலிகைச் செடிகளை பறித்து வர ஆசிரியர் கூறினார். அன்று இரவு செருப்பணியாத ஆசிரியரின் கனவில் செருப்பு அணிந்து பூமித்தாய்க்கு மதிப்பளிக்காததை காட்டியது. ஆனால் தான் செருப்பணியும் பழக்கத்தை கைவிட்டு பல மாதங்கள் ஆகியும் ஏன் இந்த கனவு என யோசிக்கத் தொடங்கினார். மறு நாள் பயிற்சிக்கு வந்த சில மாணவர்கள் சில மூலிகைச் செடிகளை வேரோடு பிடுங்கி வந்திருந்தனர். மூலிகைச் செடிகளை அழிப்பதும் ஒரு பாவச் செயலாகும். அந்த பாவச் செயலுக்கு உடந்தையாக இருந்த ஆசிரியருக்கு அந்த பாவத்தில் பங்கு இருந்ததாலேதான் தனக்கு அந்த கனவு வந்ததாக ஆசிரியர் தெளிவு பெற்றார். பூமித்தாய்க்கு மதிப்பளித்து காலணி அணியாத ஆசிரியர் செடிகளை வேரோடு பிடுங்கச் செய்த குற்றத்தை பூமித்தாய் எங்ஙனம் பொறுப்பாள்?

சிருஷ்டி சன்மான் விருது பெற்றவர்கள்

சிருஷ்டி நிறுவனம் ஆரம்பித்து 25 வருடங்கள் நிறைவடைந்ததை கொண்டாடும் விதமாக பலருக்கு சிருஷ்டி சன்மான் விருது கொடுத்து கௌரவித்தது. கடந்த ஜூன் 2018 ல் இந்த விருது வழங்கும் விழா மற்றும் தேனீ (நம் வழி வேளாண்மை) கூட்டமைப்பு ஆர்வலர்களின் கூட்டமும் இணைந்து 3 நாட்கள் நடைபெற்றது. இதில் கௌரவிக்கப்பட்ட சிலரின் சேவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீமதி பானுமதி பென்னின் கல்வி சேவை

குஜராத்தில் மால்பூர் கிராமத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளை பள்ளிக்கு சரியாக அனுப்புவதில்லை. சிறு குழந்தைகளை கண்காணிப்பதற்கு பிள்ளைகளை ஈடுபடுத்துவதால் பள்ளிக்கு அனுப்புவதில்லை. ஸ்ரீமதி பானுமதிபென் பெற்றோர்–களை உடனடியாக சந்தித்து குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்களிடம் சபதம் வாங்கினார். பள்ளி மாணவர்களுக்கு பஜனை பாடல்கள், கிராமிய பாடல்களை பாட வைத்து உற்சாகம் ஊட்டினார். எல்லா மாணவர்களிடமும் தலித் மாணவர்களையும் சேர்த்து சம உரிமை வழங்கினார். இவருடைய ஆர்வமும் முயற்சியும் கல்வி தரத்தை உயர்த்திய ஆசிரியர் விருது குஜராத் அரசு மூலம் கிடைத்தது. மால்பூர் கிராம பஞ்சாயத்து தலைவராகவும் தேர்ந்தேடுக்கப்பட்டார். கல்வி சம்மந்தமான சீர்திருத்தங்களில் கலந்துரையாட மாநில மத்திய அரசுகள் இவருடைய யோசனைகளுக்காக அழைப்பு விடுவிக்கின்றனர்.

திலிப் பல்கமியாவின் சத்துணவு

இவர் பள்ளி ஆசிரியர். இவர் பள்ளி மாணவர்களை பள்ளி கூடத்திற்கு வரும் சமயம் பயறு தானியங்களை கொண்டு வர சொல்லுவார். இந்த பயறு தானியங்களை பள்ளியில் முளைகட்ட செய்து மாணவர்களுக்கு சத்துணவாக தின்பதற்கு கொடுப்பார். இதனால் மாணவர்களின் ஆரோக்கியமும் கூடி கல்வி பயில்வதில் நல்ல முன்னேற்றமும் காணப்பட்டது. இதை பாராட்டி குஜராத் மாநில அரசு மதிய உணவில் முளை கட்டிய சத்தான உணவை கொடுத்து வருகிறது.

நிஷ்த்தாராஜ்புத்தின் பெண் குழந்தை கல்வி உதவித்தொகை

குஜராத் பரோடாவில் நிஷ்த்தா ராஜ் புத்தா என்ற பெண்மணி மக்களிடையே நன்கொடை வசூல் செய்து வசதியற்ற குடும்பங்களில் குழந்தைகளின் கல்வி செலவிற்கு குறிப்பாக பெண் பிள்ளைகளின் கல்விக்கு பயன்படுத்தி வருகிறார். 2017–2018 ல் மட்டும் 10,000 குழந்தைகளுக்கு மேலாக கல்வி உதவி தொகை அளித்துள்ளார்.

ரஹிபாய் சோமா போப்பரை

இந்த பெண்மணி 32 வகையான பயிர்களில் (நெல், சிறுதானியம், பயறு, காய்கறிகள்) 122 பயிர் ரகங்களை பாதுகாத்து வருகிறார். இந்த பாரம்பரிய பயிர் இரகங்களை சிறு பாக்கெட்களில் விற்று வருகிறார். இது வரை 4,000 பாக்கெட்களை விநியோகித் துள்ளார். இது தவிர நெல்லில் ஒற்றை நாற்று நடவு

முறை, பயிர்களுக்கு இயற்கை விவசாய உத்திகளை கடைபிடித்து நிபுணத்துவம் பெற்றுள்ளார். சுற்று கிராமங்களில் மகளிர் குழுக்களை ஏற்படுத்தியுள்ளார்.

தேவஸ் ரமேஷ்பாய் படேல்

இவர் அமெரிக்காவில் குடியுரிமை பெற்று அங்கே வேலை பார்த்து வந்தார். இந்த வேலையை துறந்துவிட்டு இந்தியாவிற்கு வந்து இயற்கை விவசாயம் செய்து வருகிறார். முழு நேர இயற்கை விவசாயியாக இருந்து வருகிறார். இவர் தனது தோட்டத்தில் விளைந்த உணவு பண்டங்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்து வருகிறார். இதனால் விவசாயத்தில் லாபம் ஈட்ட முடிகிறது. விவசாய வேலைகளை செய்வதற்கு புதிய விவசாய கருவியை உருவாக்கி பல வேலைகள் செய்வதற்கு பயன்படுத்தி வருகிறார். இதனால் வேலை ஆட்களின் தேவை குறைந்து வருமானம் கூடுகிறது. இவருடைய வேளாண்மை உத்திகள் பிற இளைஞர்களையும் ஊக்கப்படுத்துவதாக உள்ளது.

பள்ளி கல்வி முறையில் புதிய உத்திகள் மற்றும் ஆராய்ச்சி மையம்

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் சில பள்ளி ஆசிரியர்கள் சேர்ந்து இந்த மையத்தை ஏற்படுத்தியுள்ளனர். மாநிலஅளவில் ஆரம்பப் பள்ளி கல்வி முறையில் புதிய உத்திகளை கடைபிடிக்கும் 3000 பள்ளி ஆசிரியர்களை பற்றி தொகுத்துள்ளனர். இதனை பத்திரிக்கை மற்றும் புத்தக வடிவில் மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் பரப்பி உள்ளனர். இதன் மூலம் 1700 பள்ளி மாணவர்கள் தனியார் பள்ளிகளிலிருந்து விலகி அரசு பள்ளியில் சேர்ந்துள்ளனர். ஆசிரியர்களிடையே புதிய உத்திகளை கடைபிடிக்கும் பாங்கினை ஆதரித்து ஓர் இயக்கத்தையை உருவாக்கியுள்ளனர்.

யாகியா சபத்வாலா

பிறவிலேயே பார்வையற்ற திரு. யாகியா கல்வி முறையில் பல உத்திகளை படைத்து சாதனை புரிந்துள்ளார். 150 பார்வையற்ற இளைஞர்களுக்கு கம்யூட்டர் இயக்குவதை கற்று கொடுத்துள்ளார். இவர் பார்வையற்ற பள்ளி ஆசிரியர்களின் சங்கத்தின் தலைவராக உள்ளார். வாழ்க்கை கல்வி என்ற பத்திரிக்கையில் ஆசிரியர் குழுவில் உறுப்பினராக உள்ளார். இவர் எழுதிய புத்தங்கள் குஜராத் மாநில கல்வி முறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

ரமேஷ் பந்தாரு

இவர் 22 வயது இளைஞர். இவர் பள்ளி, கல்லூரியில் படித்து கொண்டே பல வகையான மர விதைகள், பாரம்பரிய பயிர் விதைகள், மூலிகை தாவரங்கள் போன்றவற்றை சேகரித்து வருகிறார். இது வரை 477 வகையான தாவரங்களின் விதைகள், பொருட்கள் போன்றவற்றை சேகரித்து கண்காட்சிகளில் கலந்து கொண்டு பாராட்டுகளை பெற்றுள்ளார். இவர் பசுமை மாணவர் 2017 விருதினை பசுமை புரட்சி நிறுவனத்திலிருந்து பெற்றுள்ளார். இவர் 2017ல் சிருஷ்டி நிறுவனம் ஏற்பாடு செய்த சாத்விக் பாரம்பரிய உணவு கண்காட்சி மற்றும் பல்லுயிர் பன்மய விழா நிகழ்ச்சியில் கலந்துள்ளார்.

இயற்கை வேளாண்மைக்கு திரும்புவோம்

கனடா நாட்டிலிருந்து மசூர் பருப்பு இறக்குமதி மூலமாக இந்தியாவுக்கு பெரும் பாதிப்பை உருவாக்க காத்திருக்கிறது என்று சூழிலியல் செயல்பாட்–டாளர்கள் எச்சரிக்கிறார்கள். 2016 முதல் 2017 ஆம் ஆண்டுகளில் மட்டுமே சுமார் 8,29,000 டன் பருப்பை இந்தியா இறக்குமதி செய்திருக்கிறது. அதில் சுமார் 90 சதவிகிதம் கனடாவிலிருந்து வந்தவை. உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் தமிழகத்தில் ரேஷன் கடைகளில் மசூர் பருப்பு விற்க தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. இந்தப் பருப்பு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் க்ளைபோசேட் ரசாயனத்தால் ஆட்டிஸம் முதல் புற்று நோய் வரை குழந்தைகளுக்கு பாதிப்புகள் ஏற்படலாம் என்று உலகம் முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. பருத்தி உற்பத்தியிலும், க்ளைபோசேட் என்ற களைக்கொல்லி மருந்து பயன்படுத்தப் படுகிறது என்று தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அரச்சலூர் செல்வம் கூறுகிறார்.

இப்படி ரசாயன உரங்களும், மருந்துகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் இயற்கை வேளாண்மையில் உருவான பருத்தி, இயற்கை சாயம் பெற்ற ஆடை போன்றவற்றையே வாங்க வேண்டும் என்ற ஒரு உணர்வு இப்பொழுது பெருகி வருகிறது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பிரயாணிகள் இப்படிப்பட்ட பொருள்களையே என்ன விலை கொடுத்தாலும் வாங்குவதற்கு தயாராக இருக்கிறார்கள். நமது நாட்டில் கூட செக்கு எண்ணெய்க்கும், கருப்பட்டிக்கும் இப்பொழுது மவுசு கூடி வருகிறது.

சிக்கிம் மாநிலத்தில் முழுவதும் இயற்கை வேளாண்மையே நடைபெறுவதால் அந்த மாநிலத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை விருது அளித்திருக்கிறது. உணவு என்று நினைத்து சாப்பிடும் பொழுது ரசாயனப் பொருள் கலந்ததால் நோய்கள் பல உண்டாகின்றன. அதற்காக மருத்துவமனைகளில் ஏராளமாக செலவளிக்க வேண்டியிருக்கிறது. நோய் வராமல் தடுக்கும் முயற்சியாக இயற்கை வேளாண்மை பொருள்களை உபயோகப்படுத்துவது மிகவும் உகந்தது என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே பரவி வருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சர்வோதய சங்கத்தைச் சேர்ந்த கதர் வஸ்திராலய அன்பர்கள் நாட்டுப்பருத்தி, இயற்கை விவசாயம் அதில் உண்டான சிறு தானியங்கள், இயற்கை சாயத்தினால் தோய்ந்தெடுக்கப்பட்ட கதர் ஆடைகள் என்ற விஷயங்களில் கவனம் செலுத்தினால், மக்களுடைய ஆரோக்கியத்தை காப்பதற்கும் அது உதவியாக இருக்கும். மக்கள் மத்தியிலே இதற்கான புத்துணர்ச்சியை ஏற்படுத்தி இப்பொருள்களையே வாங்கி நுகரும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

நன்றி : காந்திய அமுதம்

ஆல்பர்ட்டின் மண் அணைப்பான் கருவி

திரு. ஆல்பர்ட் (வயது 49). இவர் 6வது வரை படித்துள்ளார். இவர் திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டி அருகில் உள்ள பஞ்சம்பட்டி எனும் கிராமத்தில் வசித்து வருகிறார். இவர் கடந்த 25 வருடங்களாக பவர் டில்லர் கருவியை விவசாயிகளின் வசதிகேற்றவாறு மாற்றி அமைத்து தருகிறார். ஒரு முறை திரு. அழகர்சாமி, பள்ளப்பட்டி முருங்கை விவசாயி தன் விவசாய நிலத்தில் வரப்பு மற்றும் வாய்க்கால் அமைக்க வேலையாட்களுக்கு கொடுக்கும் கூலியானது அதிக செலவுகளை ஏற்படுத்துகிறது என்று கூறினார். எனவே இதற்கு மாற்றாக பவர் டில்லர் மூலம் இவ்வேலையை செய்ய யோசனை கூறினார். அவர் கூறிய யோசனைப் படி திரு. ஆல்பர்ட் பவர் டில்லர் கருவி இணைப்புடன் "V" வடிவிலான கலப்பை போன்ற அமைப்பை உருவாக்கி டில்லர் பின் பகுதியில் இணைத்துள்ளார்.



இக்கருவி 2 அடி அகலம் ¾ அடி ஆழம் வரை மண் அணைத்து வாய்க்கால் கரை போடும். இது 13 hp மோட்டார் திறன் கொண்டது. ஒரு மணி நேரத்தில் ½ ஏக்கர் வரை வேலை செய்யும் திறன் கொண்டது. எரிபொருள் மணிக்கு 1 லிட்டர் டீசல் செலவாகும். 20 நபர் செய்யும் வேலையை 8 மணி நேரத்தில் ஒரு நபர் முடித்து விடலாம்.

டி. ஆல்பர்ட்
3/326, ஆரோக்யமாதா தெரு
பஞ்சம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல்
ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்
செல் – 9344715339

இராமசாமியின் புதிய தீவன பயிர் இரகம்

திரு. இராமசாமி (39 வயது) பி.பி.ஏ., படித்து விட்டு தற்சமயம் தனது சொந்த ஊரான பழனி கணக்கன்பட்டியில் கடந்த 7 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறார். ஐந்து வருடங்கள் திருப்பூரில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து விட்டு சொந்த ஊருக்கு திரும்பி விட்டார். மூன்று வருடங்களுக்கு முன்னர் இவர் சூப்பர் நேப்பியர் என்ற தீவன இரகத்தை பற்றி இணைய தளத்தில் அறிந்து விருத்தாசலத்திலிருந்து இதை தருவித்தார். இதிலிருந்து தனியாக ஓர் இரகத்தை உருவாக்கியுள்ளார். இந்த தீவன தட்டையை மாடுகள் உட்கொள்வதால் பாலில் புரதசத்து அதிகமாவதை அறிந்து கொண்டார். இவர் தீவன தட்டைகளை பிற விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறார்.

சூப்பர் நேப்பியர் இரகம் சோளத்தட்டையை போன்று சற்று தடிமனாக உள்ளது. இது 7–8 அடி வரை உயரமாக உள்ளது. சுமார் 60 நாட்களில் இதனை அறுவடை செய்து மாடுகளுக்கு தீவனமாக வழங்கலாம். இதனை சாகுபடி செய்து வந்த சமயத்தில் சில தட்டைகள் மட்டும் தண்டு பகுதி இளம்சிவப்பாக காணப்பட்டன. இவைகளைத் தனியாக பிரித்து நட்டுப்பார்த்ததில் இந்த தட்டைகள் அறுவடையாக 80 நாட்கள் பிடித்தன. அதாவது சூப்பர் நேப்பியர் தட்டையை விட 10 நாட்கள் அதிகம் ஆகின்றது. இந்த தட்டைகளை மாடுகள் விரும்பி எடுக்கும். இந்த தட்டைகளை மாட்டிற்கு 10 கிலோ அளவில் கொடுத்தால் போதும். இதனால் பசு மாடு ஒரு நாளைக்கு 1/2 லிட்டர் பால் அதிகம் கறக்கும். அதே சமயம் பாலில் புரதசத்தின் அளவு அதிகமாக இருக்கும் (20–22 அளவு புரதசத்து). சூப்பர் நேப்பியர் தட்டையை ஒரு பசு மாட்டிற்கு 15 கிலோ வரை கொடுத்தாலும் புரதசத்தின் அளவு 16–18 அளவு மட்டும் தான் இருக்கும். சூப்பர்நேப்பியர் விளைச்சல் ஏக்கருக்கு 220 டன். இது சாதாரண கோ–4 ஐ விட 100 டன்கள் அதிகம். சிவப்பு நேப்பியர் இரகம் ஏக்கருக்கு 160–180 டன்கள் கிடைக்கும். இதனை 2x 1.5 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். எனவே இந்த புதிய தீவன பயிறுக்கு சிவப்பு நேப்பியர் என்ற பெயர் வைத்து விநியோகிக்கிறார். தட்டை ஒன்றுக்கு ரூ. 1 பெற்றுக்கொள்கிறார். கேரளாவில் உள்ள ‘‘மில்மா‘‘ என்ற அரசு பால் பண்ணை சங்க உறுப்பினர்களுக்கு இந்த தீவன தட்டை பயிரிட விநியோகித்து வருகிறார்.

இராமசாமி
கணக்கன்பட்டி, பழனி வழி
திண்டுக்கல் மாவட்டம். செல் – 9994555934

ஹில்டான் ஆட்டு பண்ணை

புது தில்லி, குர்காவுன் நகருக்கு அருகே திரு. ஏ.கே. பாண்டே என்பவர் (42 வயது) கெமிக்கல் இன்ஜினியராக ஒரு கம்பெனியில் 11 ஆண்டுகள் வேலைபார்த்து விட்டு ஊருக்கு வந்து சொந்தமாக ஆட்டு பண்ணை வைத்துள்ளார். 2017 ல் செப்டம்பர் மாதத்தில் 27 பெட்டை ஆடுகள் 3 கிடா ஆடுகளுடன் பண்ணையை தொடங்கினார். இவர் உள்ளூர் தோட்டாபுரி பெட்டையுடன் ஜக்ரானா கிடாவை வைத்து இனப்பெருக்கம் செய்து கலப்பின ஆடுகளையும் உருவாக்கி வளர்த்து வருகிறார். இது தவிர பீட்டல் என்ற பால் அதிகம் கறக்கும் ஆட்டு பெட்டைகளையும், கிடாக்களும் வைத்துள்ளார். பீட்டல் கிடா ஒன்று ரூ. 50,000 க்கு வாங்கியுள்ளார். இவர் மாதம் ஒரு முறை குடற்புழுநீக்கம் செய்கிறார். கிடா குட்டிகளை 14 மாதத்தில் விற்பனை செய்கிறார். 6 மாதங்களுக்கு ஒரு தடவை உடம்பிலுள்ள ஒட்டுண்ணிகளை அழிக்க ஐவர்மெட்ரின் ஊசி போடுகிறார். பூடாக்ஸ் மருந்து கலவையினால் கழுவி உன்னி, பேன்களை நீக்குகிறார். சினை ஆடுகளுக்கு அல்பென்டசால் மருந்து தராமல் பென்பன்டசால் மருந்து கொடுத்து குடற்புழுநீக்கம் செய்கிறார். புளுக்கானின் என்ற மருந்தை எல்லா தரப்பட்ட ஆடுகளுக்கும் குடற்புழு நீக்கம் மருந்தாகத் தருகிறார். ரெஸ்டோபால் என்ற ஆயுர்வேத டானிக்கை குடற்புழு மருந்து கொடுத்த பின் தருவதால் ஸ்ட்ரெஸ் உள்ள ஆடுகள் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பிவிடுவதாகக் கூறுகிறார்.

இவரிடம் பீட்டல் 50, பார்பரி 200, தோட்டபுரி 8 எண்ணிக்கையில் ஆடுகள் உள்ளன.

இவரது பண்ணையில் வருடத்திற்கு 150 ஆடுகள் ஈத் பண்டிகை சமயத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. வருடத்திற்கு ரூ. 13 லட்சத்திற்கு விற்று வந்தாலும் பராமரிப்பு செலவு 5 பணியாளர்கள் சம்பளம் உட்பட ரூ 15 லட்சம் ஆவதால் வருடத்திற்கு ரூ. 2 லட்சம் நட்டம் ஏற்படுகிறது என கூறுகிறார். இதை சரிக்கட்ட மூலிகைச் செடிகளை நிலத்தில் வளர்த்து விற்பனை செய்ய உள்ளார். இவருடைய பண்ணையில் கடைபிடிக்கும் உத்திகள் பின்வருமாறு:

வெள்ளாடுகளுக்கு வரும் உப்பிசத்திற்கு

கடுகு எண்ணெய் 20 மி.லியுடன் மனித சிறுநீர் 20 மி.லி. கலந்து கொடுக்க வேண்டும். அல்லது கடுகு எண்ணெயுடன் 20 மி.லி சாராயம் சேர்த்தும் தரலாம்.

ஆட்டு தொழுவத்தை சுத்தம் செய்ய

ஆடுகள் அடைக்கும் தொழுவத்தில் 15 நாட்களுக்கு ஒரு தடவை 15 மி.லி பினாயில் (ஒயிட் பினாயில்) 20 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளித்து விடவும்.

ஆடுகளுக்கு தீவனம்

வெள்ளாடுகளுக்கு மக்காச்சோளம், மற்றும் கம்பு சம அளவு குருணையாக அரைத்து கொடுக்கிறோம்.

கால்குளம்பு புண்களுக்கு

பொட்டாசியம் பெர்மாங்கணேட் 1 மி.லி யை 1 லிட்டர் நீரில் கலந்து கால் பகுதியை 3 நாட்கள் தொடர்ந்து கழுவி வர வேண்டும்.

A. K. Pandey, Village & Post Teekli
Landmark - Near Sakatpur village
Gurgaon - 122101, Haryana
Cell : 9911693807

ஆடுகளுக்கு அடர் தீவனம்

சோளம், அரிசி, கம்பு ஒவ்வொன்றும் 100 கிலோ எடுத்து மாவாக அரைக்க வேண்டும். இந்த மாவை கூழாக காய்ச்சி நீரில் கலந்து கொடுக்கிறேன். எங்கள் பண்ணையில் உள்ள 50 வெள்ளாடுகளுக்கு 6 கிலோ மாவு தேவைப்படுகிறது. அதாவது ஓர் ஆட்டிற்கு சுமார் 1/4 கிலோ மாவு தேவை. இவ்வாறு கூழாகக் காய்ச்சி கொடுப்பது எளிதாக உள்ளது. மாவாக கொடுக்கும் சமயம் சில ஆடுகள் மற்ற ஆடுகளை தின்ன விடாமல் செய்து விடும். இது தவிர ஆட்டிற்கு 3 கிலோ மலைவேம்பு தழை கொடுக்கிறேன்.

ராஜா, அந்தியூர், செல் : 9942585666

சிவவள்ளுவனின் பன்றி பராமரிப்பு

திரு. சிவவள்ளுவன் (35) 8வது வரை படித்துள்ளார். இவர் தூத்துக்குடி மாவட்டத்தில், ஒட்டப்பிடாரம் தாலுகா, பெரியநத்தம் கிராமத்தில் வசித்து வருகிறார். இவர் கடந்த 4 வருடங்களாக பன்றி வளர்த்து வருகிறார். அத்துடன் 20 வருடங்களாக மீன் வியாபாரம் செய்து வருகிறார். தற்போது 30 பன்றிகள் அதில் 3 ஆண் பன்றிகள் உள்ளன. இவர் இரண்டு வகையான பன்றிகள் வளர்த்து வருகிறார். நாட்டு பன்றிகள் மற்றும் சீமை பன்றிகளாகும்.

நிறங்கள் : சிவப்பு, கருப்பு, கருப்பு வெள்ளை, சாம்பல்

இவர் வளர்க்கும் பன்றிகள் ஒரு ஈத்துக்கு 7 குட்டிகள் வீதம் வருடத்திற்கு 2 ஈத்துகள் குட்டிகள் போடும்.

சீமைவகை பன்றிகள் எடை அதிகரிப்பதுடன் 300 கிலோ வரை வளரும். ஆனால் நாட்டு பன்றிகள் அவ்வாறு இருப்பதில்லை. அதிகபட்சம் 90–95 கிலோ வரை மட்டும் வளரும். சீமை பன்றி கிலோ ரூ. 110 க்கும் நாட்டு பன்றி கிலோ ரூ.90 க்கும் விற்பனை செய்கிறார். இதில் வருடத்திற்கு ரூ.1,50,000 வரை வருமானம் கிடைப்பதாக கூறுகிறார்.

பன்றியின் கழிவுகளை உரமாக விற்பனை செய்கிறார். இதில் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை ஒரு டிராக்டர் லோடுக்கு ரூ. 5000 வரை விற்பனை செய்து வருகிறார்.

பன்றிகளுக்கு ரேசன் கடை அரிசி, கழனி தண்ணீர், ஹோட்டல் கழிவுகள் போன்றவற்றை கொடுத்து வருகிறார்.

பன்றிகளின் கொட்டகைக்கு ஊருக்கு கொள்ளைப் புறத்தில் தரை வாடகை கொடுத்து வளர்த்து வருகிறார். தரை வாடகையானது வருடத்திற்கு ரூ15,000 மற்றும் தண்ணீருக்காக ரூ. 15,000 செலவு செய்கிறார்.

அவருக்கு சொந்த இடம் இருப்பின் பன்றிகளுக்கான நிரந்தர கொட்டகை அமைப்பு மற்றும் வேறு சில வசதிகளை அமைத்து பராமரித்தால் இன்னும் லாபகரமாக இருக்கும் என கூறுகிறார்.

திரு. சிவ வள்ளுவன்
த/பெ. ராமர்
பெரிய நத்தம் கிராமம், குறுக்கு சாலை அஞ்சல்
ஒட்டப்பிடாரம் தாலுகா. தூத்துக்குடி மாவட்டம்
செல் – 8220507731

நீரை எளிதில் ஊற்ற

இன்று ஒவ்வொரு அலுவலகத்திலும் அல்லது கூட்டம் நடைபெறும் இடங்களில் மினரல் வாட்டர் பயன்படுத்துகிறோம். இதனை படத்தில் கவிழ்த்து நீர் பிடிக்க ஏதுவாக உயரமான பகுதியில் வைத்து விடுகிறோம். இந்த சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை சிலிண்டரிலிருந்து வேறு பாத்திரத்தில் ஊற்ற சுமார் 40 வினாடிகள் ஆகும். இந்த சிலிண்டரில் ஒரு பி.வி.சி. குழாயை இணைத்துவிட்டால் வெகு எளிதாக நீர் வெளியேறிவிடும். அதாவது 10 வினாடிகளில் ஊற்றிவிடலாம்.

எம். சரவணன்
கதவு எண் : 7 வடக்குரத வீதி
தொட்டியம் – 621 215
திருச்சி மாவட்டம்
செல் : 9047261565

மரத்தூரை பெயர்த்து எடுக்கும் இயந்திரம்

பொதுவாக பேப்பர் தொழிற்சாலைகளுக்கு மரங்களை உற்பத்தி செய்து பின்னர் வெட்டி ஏற்றுவார்கள். மலைவேம்பு, சவுக்கு போன்ற மரங்களை வெட்டிய பின் நிலத்திலுள்ள தூரை தோண்டுவதற்கு ஜே.சி.பி. இயந்திரத்தை வரவழைத்து பயன்படுத்துவது வழக்கம். இதற்கு செலவு அதிகமாகும். ஜே.சி.பிக்கு பதிலாக டிராக்டரில் ஹைட்ராலிக் முறையில் பிடுங்கும் கருவியை இணைத்து இந்த வேலையை மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் திரு.இந்திரஜித் சிங் என்பவர் உருவாக்கியுள்ளார். தனது தோட்டத்தில் உபயோகப்படுத்தி வெற்றி கண்டுள்ளார்.

தயாநிதியின் கால்நடை வைத்தியம்

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி தாலுகா மும்பாலை கிராமத்தில் திருமதி. தயாநிதி (வயது 34) வசித்து வருகிறார். இவர் தனது கணவருடன் சேர்ந்து செம்மறி ஆடு, வெள்ளாடு பராமரித்து வருகிறார். இவர் 12ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் தனது பகுதியிலுள்ள ஆடுகளுக்கு மூலிகை வைத்யம் செய்து வருகிறார்.

விடாத கழிச்சலுக்கு

இவர் பகுதியில் ஓர் ஆடு விடாத கழிச்சலால் பாதிக்கப்பட்டு இருந்தது. அதற்கு கீழ்க்கண்ட வைத்யம் செய்தார். இதற்கு கொய்யா கொழுந்து – 1 கைப்பிடி, சுக்கு – 25 கிராம், வெல்லம் – 50 கிராம். மேற்கூறியவற்றை தனித்தனியாக இடித்து எலுமிச்சை பழ அளவு இரண்டு உருண்டைகளாக தயார் செய்து கொண்டு பாதிக்கப்பட்ட ஆட்டுக்கு காலை மாலை இருவேளை உள்ளுக்கு கொடுத்து சரி செய்துள்ளார். மேலும் கொய்யா கொழுந்து – 1/2 கைபிடி, ஆவாரம் கொழுந்து – 1/2 கைபிடி, வேப்பங்கொழுந்து – 1/2 கைபிடி, சீரகம் – 5கிராம், வெல்லம் – சிறிது மேற்கூறியவற்றை தனித்தனியாக இடித்து எலுமிச்சை பழ அளவு உருண்டையாக பிடித்து பாதிக்கப்பட்ட ஆட்டிற்கு கொடுத்து பார்த்ததில் ஒரே வேளையில் கழிச்சல் குணமாகி விட்டது என்று தெரிவிக்கிறார்.

கானல் நோய் / கோமாரி நோய்க்கு

கானல் நோய் வந்த மாட்டின் வாயை வெந்நீருடன் உப்பு சேர்த்து கழுவி விட்டு எலுமிச்சை பழம் சாற்றை தடவி விட வேண்டும். பின்பு எலுமிச்சை சக்கையை உள்ளுக்கு கொடுக்க வேண்டும். பூவன் பழம் இரண்டை உள்ளுக்கு கொடுக்க வேண்டும். முடக்கத்தான், கொய்யா கொழுந்து, வேப்ப இலை கொழுந்து மூன்றையும் தண்ணீரில் கொதிக்க வைத்து அந்த தண்ணீரை காலில் ஊற்றி கழுவி விட வேண்டும்.

வயிறு உப்பிசத்திற்கு

பூண்டு – 10 கிராம், இஞ்சி – 5 கிராம், மிளகு – 5 கிராம் மேற்குறிப்பிட்ட மூன்றையும் சேர்த்து அரைத்து சிறிது வெல்லம் சேர்த்து உருண்டையாக உருட்டி பாதிக்கப்பட்ட மாட்டிற்கு கொடுக்க ஒரே வேளையில் குணமாகும்.

கே. தயாநிதி
மேலஸ்தானம், மும்பாலை, மணமேல்குடி, புதுக்கோட்டை மாவட்டம் , செல் –8124793119

பூசணியில் 14 கிலோ காய்க்கும் இரகம்

எங்கள் சூலமங்கலம் கிராமத்தில் சுமார் 15 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு தான் கடை மடையில் தண்ணீர் வாய்க்காலில் நீர் சென்று சிறிது விவசாயம் செழித்தது. மேலும் வரும் ஆண்டில் விவசாயம் செய்ய ஏற்ற நெல் சாகுபடி ஐ.ஆர். 50 மூட்டை 1050 க்கு 2 மூட்டை வாங்கி 200 குழி நிலத்தில் நடவு செய்தால் சுமார் 25 முதல் 30 மூட்டை சர்வ சாதரணமாக கிடைக்கும் . எனது விவசாயத்தில் இந்த வருடம் ரூ. 23,000 பணம் கிடைத்தது. செலவு ரூ. 7200 தான். அதில் ஊடுபயிராக துவரை, மொச்சை பொங்கலுக்கு மஞ்சள்கொத்து போன்றன போட்டு அதில் ரூ.20,000 ம் கிடைத்தது. இதற்கு இயற்கை உரம் ஆட்டுப் புழுக்கை மற்றும் சாணம் மட்டும் தான்கொடுத்தேன். வேறு எதுவும் இட வில்லை. என் வீட்டின் வாசலில் ஒரு கத்தரிச் செடி வைத்தேன். அது மூன்று நாட்களுக்கு ஒரு முறை சுமார் 3 கிலோ வீதம் (ஆப்பிள் மாதிரி) போன்று திடமாக காய்த்தது ரூ. 700 முதல் ரூ. 850 கிடைத்தது என் வீட்டிற்கும் அருகில் உள்ள வீடுகளுக்கும் இலவசமாக கொடுத்தேன். தாங்கள் கொடுத்த பரங்கி விதை ஒரு ஆள் கட்டி அணைக்கும் அளவிற்கு ஒரு பரங்கிக்காய் 12 முதல் 14 கிலோ வரை காய்த்து உள்ளது. பக்கத்து விவசாயிகள் அதிசயத்துடன் பார்த்து அச்சரியப் படுகின்றனர்.

பரங்கிக்காய் விதை போட்டு ஒரு மாதத்தில் காய்த்தது. இந்த காய் 1 கீத்து ரூ.10 க்கும் ஒரு பரங்கிக்காய் சுமார் ரூ. 120 ல் இருந்து ரூ. 140 வரை விற்றேன். வீட்டிற்கு தேவையான சிறிய காய்களை வைத்துக் கொண்டு 14 காய்களை விற்று விட்டேன் மீதம் 10 காய்கள் பெரிதாக வளர்ந்து கொண்டுள்ளன. இயற்கை உரம் தான் கொடுத்தேன். என்னவென்றால் மாட்டு சாணம், ஆட்டு புழுக்கை சிறிது வேப்பம் புண்ணாக்கு தான் உரம். சிறிதும் அலட்சியம் இல்லாமல் செய்தால் விவசாயத்தில் நல்ல லாபம் எடுக்கலாம். கடனில்லா வாழ்வு என்பது இன்றைய கால கட்டத்தில் மிகவும் சிரமம். அதை நாம் கண்ணும் கருத்துமாக செய்யும் போது நாமே முதலாளி.

நா. தனசேகரன்
2/41, அக்ரஹாரம், சூலமங்கலம்,
பசுபதிகோவில்அஞ்சல் , தஞ்சாவூர் மாவட்டம்
செல் : 9715109946

விஷம் தீண்டிய மாடு பிழைத்தது

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி தாலுகா, வெட்டிவயல் பஞ்சாயத்து குமரப்பன்வயலில் திருமதி. சாந்தினி, திருமதி. இராஜேஸ்வரி, திருமதி. கஸ்தூரி ஆகிய மூவரும் இவ்வூரில் மகளிர் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் நடைபெற்று கொண்டிருக்கும் சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தில் மதுரை சேவா நிறுவனம் மூலம் கீழ் வெள்ளாடு வளர்ப்பு மற்றும் கால்நடை மூலிகை வைத்திய பயிற்சியில் கலந்து கொண்டு வருகின்றனர். இவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட மூலிகை வைத்தியத்தை தங்களது ஊரில் செயல்படுத்தி வருகின்றனர்.

இவர்களது ஊரில் ஒரு நாள் ஒரு மாடு வயிறு உப்பி கொண்டு மூச்சு இல்லாமல் கிடந்தது. அந்த மாட்டை சுற்றி ஆட்கள் கூடி பார்த்துக் கொண்டிருந்தார்கள். கூடியிருந்தவர்கள் மாட்டிற்கு பாம்பு கடித்து விட்டதாகவும் மாடு இறந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளனர். உடனே மாட்டை தொட்டு பார்த்து மாடு உயிருடன் இருப்பதை உணர்ந்து அம்மாட்டிற்கு மூலிகை வைத்தியம் செய்ய முற்பட்டனர். எருக்கு கொளுந்து இலையை அரைத்து சாறு எடுத்து 3 சொட்டு வீதம் இரு கண்களிலும் விட்டவுடன் மாடு துடித்து எழுந்தது . சாணம் மற்றும் நீர் பிரிந்தது. பின்பு வயிறு உப்பிசத்திற்கு எலுமிச்சை பழ சாறுடன் சமையல் சோடாஉப்பு சேர்த்து உள்ளுக்கு கொடுக்க மாடு நன்றாக குணமாகியது.

திருமதி. சாந்தினி செல் – 8122053050
திருமதி. இராஜேஸ்வரி – 7639921547
திருமதி. கஸ்தூரி – 7639318851
குமரப்பன் வயல் , வெட்டிவயல் அஞ்சல்
மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்

சரோஜாவின் கால்நடை வைத்யம்

புதுக்கோட்டை மாவட்டம், கட்டுமாவடி, ராமர் கோயில் தெருவில் வசிக்கும் சரோஜா அம்மையார் (வயது 62) 2 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது தொழில் ஆடு வளர்ப்பு. இவர் 15 வருடங்களாக ஆடுகளுக்கும், மனிதர்களுக்கும் வரும் நோய்களுக்கு மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவரது பாட்டியும் மூலிகை வைத்தியம் செய்பவர் என்று கூறினார்.

இவரது கால்நடை மூலிகை வைத்தியம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆடு கழிச்சலுக்கு

மாதுளை பிஞ்சு – 1, தென்னங்குரும்பை – 2 , எடுத்து அரைத்து 1/2 லிட்டர் தண்ணீரில் 2 வேளை உள்ளே கொடுக்க வேண்டும்.

வயிறு உப்பிசத்திற்கு

ஓமம் – 1 தேக்கரண்டி, வெற்றிலை – 2, பெருங்காயம் சிறிதளவு (ரூ. 5க்கு) எடுத்து அரைத்து வெந்நீரில் கலந்து இரு வேளை கொடுக்க வேண்டும்.

திருநாவுக்கரசின் மூலிகை வைத்தியம்

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி தாலுகா, மும்பாலை கிராமத்தில் திருநாவுக்கரசு (வயது 50) வசித்து வருகிறார். இவர் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது தொழில் விவசாயம், மாடு வளர்ப்பு. இவர் 20 ஆண்டுகளாக மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவர் 20 ஆண்டுகளாக மாடு வளர்த்து வருகிறார். இவர் பந்தய மாடுகளுக்கும், பிற மாடுகளுக்கும் வைத்திய முறைகளை கூறுகிறார்.

பந்தய மாடுகளின் எடையை கூட்ட

கடல் ஆமை – 1 ஜோடி, பெருமருந்து கொடி இலை – 1 கைபிடி அல்லது – வேர் 3 இவைகளை சேர்த்து கொடுக்க வேண்டும். வாரம் இரு முறை கொடுக்கலாம்.

இளைப்பு

கண்டங்கத்தரிப்பழம் – 10, வேப்ப எண்ணெய் – 250 மி.லி. தேங்காய் பால் – 7 காய்களிலிருந்து, குமரி (சோற்றுக்கற்றாழை) – 10 மடல், மஞ்சள் – 1/2 கிலோ. இவற்றை ஒன்றாக கலந்து பிசைந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

கருப்பையாவின் கால்நடை வைத்தியம்

புதுக்கோட்டைமாவட்டம், மணமேல்குடி தாலுகா, பட்டங்காடு, மும்பாலை கிராமத்தில் (வயது 52) கருப்பையா வசித்து வருகிறார். இவர் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது தொழில் விவசாயம், ஆடு வளர்ப்பாகும். பட்டங்காடு கருப்பையாவின் மருத்துவ முறைகள் மற்றும் ஆடு வளர்ப்பு கடந்த 20 ஆண்டுகளாக தன்னுடைய ஆடுகளுக்கும், மாடுகளுக்கும், மருத்துவ முறைகளை கையாண்டு வருகிறார்.

காணை நோய்க்கு

1) தேங்காய் பாலுடன், முட்டை கலந்து கொடுக்க வேண்டும். ஓர் ஆட்டுக்கு முற்றிய தேங்காய் (பால்) – 1/2 முடி, கோழி முட்டை – 2, கல் உப்பு – சிறிதளவு எடுத்து மூன்றையும் நன்றாக கலந்து மூன்று வேளை கொடுக்க காணை நோய் வராது.

2) காரை இலை – 1 கைப்பிடி எடுத்து 1/2 லிட்டர் தண்ணீரில் கலந்து 1 வேளைக்கு 100 மி.லி வீதம் கொடுக்க வேண்டும்.

வயிறு உப்பிசத்திற்கு

வெற்றிலை – 10 , ஓமம் – 25 கிராம், இவற்றைக் கொடுக்க வேண்டும்.

காணை காய்ச்சலுக்கு

நாட்டு கோழிமுட்டை – 2 உடைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

நாகூர் அம்மாளின் கால்நடை மூலிகை வைத்தியம்

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி தாலுகா, வடக்கூர் கிராமத்தில் நாகூரம்மாள் வசித்து வருகிறார். இவருக்கு (வயது 60). இவர் 1 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது தொழில் தேங்காய் வியாபாரம். இவரது கால்நடை மூலிகை வைத்திய முறை பின்வருமாறு;

வயிறு உப்பிசத்திற்கு

சோறு போன்ற தீவனம் அதிகமாக தின்றால். பெரிய ஆட்டுக்கு ஓமம் – ரூ. 10, வெற்றிலை – 6 . குட்டிக்கு ஓமம் – ரூ. 5 , வெற்றிலை – 3 இரண்டையும் அரைத்து 2 அல்லது 3 வேளை கொடுக்க வேண்டும். பொடுதலை – 1/2 கைபிடி, பூண்டு – 1 இவற்றை அரைத்து 2 அல்லது 3 வேளை கொடுக்க வேண்டும்.

அசை போடமால் இருந்தால்

புகை போட வேண்டும். சாம்பிராணி, வேப்பங்கொட்டை போட்டு புகைகாட்ட வேண்டும் 2 வேளை 3 நாட்கள் போடவும்.

கழிச்சலுக்கு

வேரில்லாக்கொத்தான் சமூலம் 1 கைபிடி எடுத்து 2 வேளை கொடுக்க வேண்டும்.

தேள்கடிக்கு

வெற்றிலை – 3 எடுத்து சாறு எடுத்து 5 சொட்டு கண்ணில் விடுதல் வேண்டும்.

குறிப்பு : தேள் கடித்த பக்கத்தின் எதிர்பக்க கண்ணில் விட வேண்டும். 2) கடித்த வாயிலிருந்து கொடுக்கை எடுத்துவிட வேண்டும்.

உள் மருந்து

வெற்றிலை – 3, சோப்புக்காய் – 2 இவற்றை அரைத்து நீரில் கலந்து 3 அல்லது 4 வேளை கொடுக்க வேண்டும்.

கால்நடை தேள்கடியை தெரிந்து கொள்ளுதல்

கால் பகுதியில் தண்ணீரை விட்டு அடித்தால் கால் ஊன்றி நிற்காது.

கன்று ஈன்றவுடன் கவனித்தல்

1/2 படி பச்சரிசி கஞ்சி வைத்து தண்ணீராக கொடுக்க வேண்டும்.

நஞ்சுக்கொடி தின்றால்

சுரைக்காய் – 1 கைப்பிடி, குண்டுமணி இலை – 1 கைப்பிடி, (சுரைக்காய் எடுத்து சிறிய சிறிய துண்டுக்களாக்கி) கொடுக்க வேண்டும்.

எலும்பு முறிவு

நாட்டுக்கோழி முட்டை வெள்ளைக்கரு, உளுந்த மாவு தேவையான அளவு எடுத்து பசைபோல் கலந்து வைத்துக் கொண்டு 1) முடியை நீக்கி விட வேண்டும். 2) முறிவு ஏற்பட்ட இடத்தில் மருந்தை தடவ வேண்டும். 3) மூங்கில் அல்லது பனைமட்டை வைத்து அதன் மேல் துணியை வைத்து கட்டவும். 4) மறுநாள் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

நாய்க்கடிக்கு

ஊமத்தை இலை, சுண்ணாம்பு கலந்து கடிவாயில் பூசவும்.

பேன் உண்ணி நீக்க

அழுகிய தேங்காயை எடுத்து உப்புக்கலந்து தடவி மறுநாள் குளிப்பாட்ட வேண்டும்.

நாகூரம்மாள்
க/பெ. சாத்தையா
அரசு மாணவர் விடுதி அருகில், வடக்கூர்,
மணமேல்குடி தாலுகா. புதுக்கோட்டை மாவட்டம்

கால்நடை மருத்துவ தன்னார்வலர்களுக்கான பயிற்சி

கால்நடை மருத்துவ தன்னார்வலர்களுக்கான 12 நாள் பயிற்சி புதுக்கோட்டை மாவட்டம், மணல்மேல்குடியில் நடைபெற்றது. இதில் 42 மகளிர் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியின் முதற்கட்டமாக கால்நடை மூலிகை வைத்தியம் ஆடு வளர்ப்பு, ஆட்டுக்குட்டிகள் பராமரிப்பு, மற்றும் கொட்டகை பராமரிப்பு எடுத்து கூறப்பட்டது. இப்பகுதியில் ஆடுகளை சரியாக பராமரிக்காமல் இருப்பதால் தான் கோமாரி நோய், பி.பி.ஆர் நோய் போன்ற நோய்கள் வந்து இறக்க நேரிடுகிறது. அதனால் ஆடுகளுக்கு தேவையான சத்துள்ள மேய்ச்சல் நேரத்திற்கு தண்ணீர், நல்ல இரும்பு சத்துள்ள தீவன வகைகளான கீரை வகைகள், பசுந்தீவனம், புல் போன்றவற்றை தேவையான அளவு கொடுக்க வேண்டும். ஆடுகள் குட்டி ஈன்றவுடன் அவற்றை நன்றாக பராமரிக்க வேண்டும். குடற்புழு நீக்கம் குட்டிகளுக்கு கடைபிடிக்க வேண்டும். அத்துடன் கொட்டகை பராமரிப்பு மிக மிக அவசியமான ஒன்றாகும். ஆடுகளை கொட்டகைகளில் தங்க வைக்க வேண்டும். கொட்டகை நல்ல சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும். ஆடுகள் கழிக்கின்ற புழுக்கை, சிறுநீர் போன்றவற்றை சுத்தம் செய்து பராமரித்தால்தான் நோய் வராமல் ஆடுகள் நல்ல ஆரோக்கியமாக இருக்கும்.

மூலிகை வைத்தியம் பற்றிய கருத்து

பின்பு பயிற்சியாளர்கள் ஒவ்வொருவரும் முன் வந்து இப்பயிற்சியில் தாங்கள் கற்றுக் கொண்ட வைத்திய முறையை பின்பற்றி கிடைத்த அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். அப்போது மும்பாலை தயாநிதி, வடக்கூர் பத்மாவதி, நாட்டாணி புரசகுடி அஞ்சம்மாள், வித்யாமேரி, குமரப்பன் வயல் ராஜேஸ்வரி, கஸ்தூரி, சாந்தினி, கோட்டைபட்டிணம் அந்தோணியம்மாள், அம்மாபட்டிணம் ரேகா போன்றவர்கள் தங்கள் ஊரில் உள்ள ஆடுகளுக்கு மூலிகை மருந்து கொடுத்ததில் முழு திருப்தி அடைந்ததை விளக்கி கூறினர்.

மடிநோய் களிம்பு

பின்பு ஆடு மாடுகளுக்கு வரக்கூடிய மடிநோய் பற்றியும் அதற்கான மூலிகை வைத்தியம் பற்றி பேசப்பட்டது. பின்பு மடிநோய், களிம்பு, சோற்று கற்றாழை, மஞ்சள், சுண்ணாம்பு மூன்றையும் சேர்த்து எவ்வாறு தயாரிக்க வேண்டும் என்பது பற்றி செய்து காண்பிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் ஒரு கட்டமாக ஓரத்தநாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக கல்லூரி வளாகத்திற்கு 18.12.2018 அன்று சென்று வந்த பட்டறிவுப் பயணம் பற்றிய கருத்துகளை மேடையில் வந்து ஒவ்வொருவராக பகிர்ந்து கொண்டனர். அவர்கள் பகிர்ந்த அனுபவத்தில் இந்த பட்டறிவுப் பயணம்

தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தாக தெரிவித்தவுடன், ஆடு மாடுகள் வளர்ப்பதற்கு இப்பண்ணையை பார்வையிட்டது மிகவும் தூண்டுதலாக இருந்தது என்று கூறினர். ஆடு வாங்கும் போது ஆடு 6–8 மாதம் வயதில் வாங்க வேண்டும். கிடா ஆடு 8–10 மாத ஆடாக வாங்க வேண்டும். ஆட்டை நடக்க விட்டு பார்த்து வாங்க வேண்டும். தாடை வீக்கம் இருக்க கூடாது. கண்களில் நீர், வெள்ளை திரவம், பொங்கி இருக்க கூடாது. கண்கள் பிரகாசமாக இருக்க வேண்டும். உடலில் முடி சிலிர்த்து நீண்டு இருக்க கூடாது. வயிறு பகுதி இரண்டு பக்கங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். வால் பகுதியில் கழிச்சல் இருக்கிறதா என்று பார்த்து வாங்க வேண்டும். காதின் அடிப்பகுதியை தொட்டு பார்த்தால் காய்ச்சல் இருக்க கூடாது. கொம்புகள் ஒடிந்து வெடித்து அகன்று இருக்க கூடாது. ஆரோக்கியமான ஆடு என்றால் அதன் முதுகை தொட்டால் அது துள்ளி குதித்து ஓட வேண்டும்.

நம் பகுதிக்கு ஏற்ற இன ஆடுகள் கொடி ஆடு (போரை ஆடு), பார்த்து வாங்க வேண்டும். இது வெள்ளை நிறமும் கருப்பு நிறமும் கலந்து செம்மண் கலரில் புள்ளிகள் இருக்கும். இந்த ஆடுகளில் கரும்போரை, செம்போரை என இரு வகைகள் உண்டு. ஆண், பெண் ஆடுகளுக்கும் கொம்புகள் உண்டு. ஒரு ஈற்றுக்கு 3–4 குட்டிகள் வரை போடும்.

காப்பீடு

ஆடுகளுக்கு காப்பீடு செய்வதன் அவசியம், பயன்கள் அதன் முறைகள் குறித்து சேவா நிறுவனத்தின் கள அலுவலர் பாலசுப்ரமணியன் விளக்கி கூறினார். அவர் கூறிய காப்பீடுகள் இரண்டு வகை உண்டு. 1. ஆயுள் காப்பீடு 2. பொது காப்பீடு.

ஆயுள் காப்பீடு மனிதர்களுக்கு செய்ய கூடியது. அது மாதம் ஒரு முறை, 3 மாதம் ஒரு முறை அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கு 1 முறை காப்பீடு பிரிமியம் கட்ட வேண்டும். பொது காப்பீடு கால்நடைகளுக்கு, வாகனங்களுக்கு, கட்டிடங் களுக்கு, மரங்களுக்கு அனைத்துக்கும் செய்யலாம். பொது காப்பீடு நிறுவனங்களான நியூ இந்தியா அஷ்யூரன்ஸ், நேஷனல் இன்சூரன்ஸ், ஓரியண்டல் இன்சூரன்ஸ், யுனைட்டட் இந்தியா போன்ற நிறுவனங்கள் அரசு நிறுவனங்கள் எனவும் இந்நிறுவனங்களில் காப்பீடு செய்யலாம் என்று கூறினார். ஆடு மாடுகளுக்கு வருடத்திற்கு ஒரு முறை இன்சூரன்ஸ்பிரீமியம் செலுத்த வேண்டும். இன்சூரன்ஸ் செலுத்திய தேதி வருவதற்கு முன் புதுப்பிக்க வேண்டும். ஆட்டுக்கு காப்பீடு செய்வதற்கு கால்நடை மருத்துவ சான்று அளித்து தோடு போட வேண்டும். தோடு போட்டு 15 நாட்களுக்கு பிறகு தான் இன்சூரன்ஸ் காப்பீட்டு தொகை வாங்க இயலும். ஆட்டின் காதில் தோடு இல்லையென்றால் இழப்பீட்டுத் தொகை வாங்க இயலாது. தோடு தொலைந்து விட்டால் உடனே இன்சூரன்ஸ் அலுவலகத்தில் தெரிவித்து மறுதோடு போட்டு கொள்ள வேண்டும். ஆடு இறந்துவிட்டால் ஆடு இறந்தற்கான சான்று கால்நடை மருத்துவர் வழங்க வேண்டும். இன்சூரன்ஸ் பிரிமியம் தொகை ஆட்டின் மதிப்பு தொகையிலிருந்து 4 சதவிகித தொகையையும் 4 சதவிகிதத்தில் 18 சதவிகிதம் ஜீ.எஸ்.டி வரியும் சேர்த்து செலுத்த வேண்டும்.

மசால் உருண்டை தயார் செய்தல்

பொன்னமங்கலம் பகுதி கால்நடை மருத்துவ முகாமிற்கு தேவையான மூலிகை மசால் உருண்டை களை அனைவரும் சேர்ந்து தயார் செய்தார்கள்.

கதிரேசனின் கால்நடை வைத்தியம்

புதுக்கோட்டை மாவட்டம், மணல்மேல்குடி தாலுகா மேலஸ்தானத்தில் திரு. கதிரேசன் வயது 37 வசித்து வருகிறார் . இவர் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறார். இவர் தனது ஆடுகளுக்கும் தானே மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இந்த மூலிகை வைத்தியத்தை இவர் தனது தந்தையிடமிருந்தும் ஆடு மேய்க்க வரும் கீதாரிகளிடமிருந்தும் கற்றுக் கொண்டார்.

ஆடுகளுக்கு குதிரை வலிப்பு நோய்

ஆடு தலையின் உச்சியில் மாட்டு சாணத்தை அடை போன்று தட்டி வைத்து விட்டு வேப்ப எண்ணெயை காய்ச்சி இளஞ்சூட்டுடன் தலையில் அந்த சாண அடை மீது சுளீரென ஊற்ற வேண்டும். அவ்வாறு ஊற்றியவுடன் ஆடு துள்ளி குதித்து ஓடிவிடும். பின்பு இந்நோய் தீர்ந்து விடும் அல்லது காஞ்சரங்குச்சியைக் கொண்டு காதில் தோடு போன்று சொருகி விட்டால் இந்நோய் குணமாகும்.

அடிபட்ட உள் காயம் / இரத்த கட்டு

தேவையான அளவு மஞ்சள் அரைத்து மோரில் கலந்து 2–3 வேளை கொடுத்தால் குணமாகும்.

கொம்பு முறிவுக்கு

கொம்பு ஒடிந்த இடத்தில் ஆலம்பாலை தொட்டு வைத்து காட்டன் துணி கொண்டு கொம்பை நன்றாக பொருத்தி கட்டிவிட வேண்டும். இந்த கட்டை பிரித்து விட்டு மறுநாள் அதே போன்று மீண்டும் ஆறும் வரை போட வேண்டும்.

செரிமான கோளாறு

வெள்ளை பூண்டு – 1, வெல்லம் – சிறிது, பெருங்காயம் – சிறிது, இஞ்சி – சிறிது. மேற்கூறியவற்றை அரைத்து உருண்டையாக உருட்டி எலுமிச்சை பழ அளவுக்கு ஆட்டுக்கு உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

விஷம் தீண்டினால்

காதில் சிறிது கீறி விட்டு இரத்தம் சிறிது வெளியேற செய்து பின்பு ஆட்டு கோமியத்தை 100 மி.லி. அளவுக்கு உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

ஆடு படுத்து புரண்டு கொண்டிருந்தால்

ஆடு சில நேரங்களில் உடம்பை நெளித்துக் கொண்டு படுத்து புரண்டு கொண்டு இருக்கும். அதற்கு பிரண்டை செடியை எடுத்து ஆட்டின் உடம்பின் மேல் அரைத்து தேய்த்துவிட குணமாகும்.

ஆட்டின் மஞ்சள் காமாலைக்கு

வேறு ஆட்டின் கோமியத்தை 100 மி.லி. அளவுக்கு பிடித்து சூட்டுடன் உள்ளுக்கு கொடுக்க குணமாகும்.

காணை நோய்க்கு

காணை பாதித்த ஆட்டுக்கு நாட்டுக்கோழி முட்டை ஒன்றை உள்ளுக்கு கொடுக்க வேண்டும். பின்பு வாழைப்பழம் ஒன்று உள்ளுக்கு கொடுக்க வேண்டும். அதேபோல் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு கொடுக்க நோய் குணமாகும்.

ஆடுகள் பசி எடுக்காமல் மந்தமாக இருந்தால்

ஆட்டுக்கு 50 மி.லி. நல்லெண்ணெயை உள்ளுக்கு கொடுத்த பின்பு ஒரு வாழைப்பழம் கொடுக்க வேண்டும்.

கழிச்சலுக்கு

பலாக்காய் பிஞ்சு – சிறியது, விராலி இலை – 1 கைப்பிடி இரண்டையும் அரைத்து சிறிது வெல்லம் சேர்த்து ஆட்டுக்கு உள்ளுக்கு கொடுக்க வேண்டும். தொடந்து 3 வேளை கொடுக்க நோய் குணமாகும்.

கொய்யா கொழுந்து 1 கைப்பிடி, சுக்கு 10 கிராம், வெல்லம் 20 கிராம் சேர்த்து அரைத்து நெல்லிக்காய் அளவு உருண்டை செய்து 3 வேளை கொடுக்க வேண்டும்.

நஞ்சுக்கொடி போட

சந்தன வில்லை 4 அல்லது 5ஐ 1 டம்ளர் தண்ணீரில் கரைத்து உள்ளுக்கு கொடுக்க ஆடு நஞ்சு போட்டு விடும். அப்படியும் நஞ்சு போடாமல் இருந்தால் வேரில்லாகொத்தான் இலையை தின்ன கொடுக்க நஞ்சு கொடி விழுந்து விடும்.

நெல் சேமிப்பின் போது பூச்சி தாக்குதலிருந்து காப்பாற்ற

சேமிக்க வேண்டிய நெல் 1 படி அளவு எடுத்து பொறித்து அவற்றை சேமிக்க வேண்டிய நெல்லுடன் கலந்து வைத்தால் பூச்சி தாக்காது.

கதிரேசன்
மெயின் ரோடு, மேலஸ்தானம்
மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்
செல் – 7397521610
தொகுப்பு – சங்கீதா, சேவா

கால்நடை முதலுதவி மூலிகைப் பெட்டி

கால்நடைகளுக்கு திடீர் என வரும் நோய் பிரச்சனைகளுக்கு கால்நடை மூலிகை தயாரிப்புகளை கொண்டு குணப்படுத்தலாம். இந்த மூலிகை பொருட்கள் தயாரித்த நாளிலிருந்து சுமார் 6 மாதங்கள் வரை பயன்படுத்தலாம். இதனை ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் நோய் குணமாகும் வரை அல்லது 3 நாட்கள் வரை கொடுக்கலாம்.

கழிச்சல், உப்பிசத்திற்கு

கடுக்காய், ஆவாரம், சுக்கு சேர்ந்தது. மாட்டுக்கு – 30 கிராம், ஆட்டுக்கு – 15 கிராம். கழிச்சலுக்கு இந்த மருந்தை வெல்லம் – 100 கிராமுடன் சேர்த்து கொடுக்க வேண்டும். உப்பிசத்திற்கு சோடாஉப்பு – 50 கிராம் கலந்து ஒரு நாளைக்கு 1 வேளை 3 நாட்கள் தர வேண்டும்.

குடற்புழுவிற்கு

வேம்பு, நொச்சி, சோற்றுகற்றாழை, எருக்கு சேர்ந்தது. மாட்டுக்கு 20 மி.லி. ஆட்டுக்கு 10 மி.லி. ஒரு நாளைக்கு ஒரு வேளை கொடுக்க வேண்டும்.

இதன் தொடர்ச்சி 22ம் பக்கம் 2வது காலத்தில் பார்க்கவும்.

சமூக கால்நடை மருத்துவ தன்னார்வலர்களின் அனுபவ பகிர்வு

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி தாலுகாவில் சுனாமிக்கு பிந்தைய வாழ்வாதார திட்டத்தின் கீழ் 42 மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வெள்ளாடு வளர்ப்பு மற்றும் கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி 12 நாட்கள் நடைபெற்றன. இதனை மதுரை சேவா நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

1. காரக்கோட்டை தனலெட்சுமி : கழிச்சல் நோய்க்கு மாதுளம் பிஞ்சு – 3 எடுத்து அரைத்து 1/4 லிட்டர் பாலில் கலந்து 3 வேளை கொடுத்தார். குடற்புழு நீக்கத்திற்கு பாக்கை இடித்து மோரில் கலந்து கொடுத்ததை தெரிவித்தார்.

2. மணமேல்குடி வசந்தா: கோமாரி நோய்க்கு கால் குளம்புகளுக்கு இடையில் ஆறாத புண்ணிற்கு மத்தான் தைலம் போட்டு குணப்படுத்தினார்.

3. கோட்டைப்பட்டிணம் அந்தோணியம்மாள்: கோமாரி நோய்க்கு சீரகம் 50 கிராம், மஞ்சள் தூள், சிறிதளவு தேங்காய் 3 மூடி எடுத்து அரைத்து உருண்டையாக உருட்டி 3 நாள் உள்ளே கொடுத்தார். காய்ச்சலுக்கு திரிபலா சூரணம் 10 கிராம் கொடுத்து குணமாகி விட்டது என்று தெரிவித்தார்.

4) வெட்டிவயல் இராஜேஸ்வரி: கழிச்சலுக்கு 40 ஆடுகளுக்கு மூலிகை மருந்து கொடுத்தார். கொய்யாக் கொழுந்து 2 கைப்பிடி, வேப்பங்கொழுந்து 2 கைப்பிடி, மாதுளம் பிஞ்சு – 5 , மஞ்சள் தூள் – 50 கிராம் சேர்த்து அரைத்து நெல்லிக்காய் அளவு ஆடுகளுக்கு கொடுத்து குணப்படுத்தினார்.

5. கூடலூர் அஞ்சம்மாள்: சளிக்கு கண்டங்கத்தரி பழம் – 20, பச்சைமிளகாய் – 3 சேர்த்து அரைத்து அதனுடன் சிறிது சுண்ணாம்பு சேர்த்து சுடுநீரில் கலந்து ஆட்டிற்கு 50 கிராம் தரப்பட்டது. கால் முறிந்த புண்ணுக்கு தேங்காய் எண்ணெய் – 150 மி.லி, சூடம் – 25 கிராம், மெழுகுவர்த்தி – 1 (தூளாக்கிகொள்ள வேண்டும்) மேற்கூறிய மூன்றையும் சேர்த்து களிம்பு தயார் செய்து புண்ணுக்கு போட்டு குணமானது என தெரிவித்தார்.

6. கட்டுமாவடி சித்ராதேவி: வாய்புண்ணுக்கு மத்தான் தைலம் தடவி குணப்படுத்தினார்.

7. பொன்னமங்களம் உமா : புண்ணுக்கு கற்றாழை, வேப்ப இலை, மற்றும் விரலி மஞ்சள் வைத்து அரைத்து புண் உள்ள இடத்தில் பூச 5 நாளில் புண் குணமானது.

8. கோட்டைப்பட்டிணம் சுமதி: தனது மாடு அரிசியை தின்று வயிறு ஊதலாக இருந்ததால் சோடா உப்பு 50 கிராம் நீரில் கரைத்து கொடுத்துள்ளார்.

9. நாட்டாணி புரசக்குடி வித்யாமேரி:குடற்புழு நீக்கத்திற்கு ஒரு வீட்டிற்கு ரூ 100 வீதம் 5 வீட்டில் ரூ.500 வசூல் செய்து மூலிகை மசால் உருண்டை தயார் செய்து 50 ஆடுகளுக்குக் கொடுத்துள்ளார்.

10. காரக்கோட்டை கவிதா: ஆடு கழிச்சலுக்கு கொய்யாக்கொழுந்து – 2 கைபிடி, ஆவாரங் கொழுந்து – 2 கைபிடி, கற்றாழை – 1/2 மடல், மஞ்சள் தூள் – 20 கிராம் இவற்றை அரைத்து எலுமிச்சை அளவு உருண்டையாக உள்ளே கொடுத்து கழிச்சலை குணப்படுத்தியுள்ளார்.

11. ரேகா, அம்மாபட்டிணம் (ஒட்டாங்கரை)
ஆட்டுக்கு கால் முறிவு
முட்டை –2 (வெள்ளை கரு மட்டும்) அத்துடன் தேவையான அளவு உளுந்து மாவு சேர்த்து கட்டு போட்டு குணமாக்கிவிட்டதாக தெரிவித்தார்.

12. சாந்தினி : குமரப்பன் வயல் வெட்டிவயல்
கோழி ராணிகட் கழிச்சலுக்கு கீழாநெல்லியை அரைத்து தண்ணீரில் கலந்து ஒரு கோழிக்கு 5 மி.லி. வீதம் சிரிஞ்ச் மூலம் கொடுக்க குணமானது என்று தெரிவித்தார். மேலும் சுடு தண்ணீரில் உப்பு கலந்து உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

13. பத்மாவதி, வடக்கூர், மணமேல்குடி
மாட்டு வட்டப் புண், முடி கொட்டியதற்கு
வரிகுமட்டி காயை கீரிவிட்டு அதன் உள்ளே சூடத்தை வைத்து 2 நாள் கழித்து அக்காயை புண் உள்ள இடங்களில் அல்லது முடி உதிர்ந்த இடங்களில் தடவி விட்டு குணமானது என்று தெரிவித்தார். காய்ச்சலுக்கு வேப்பங்கொட்டை, வேப்பஇலைகுச்சி, சாம்பிராணி இம்மூன்றையும் சேர்த்து புகை மூட்டம் போட குணமானது. வயிறு உப்பிசத்திற்கு
வெற்றிலை–5, ஓமம்– 20 கிராம். சேர்த்து அரைத்து காலை, மாலை 2 வேளை கொடுத்தார்.

சுப்ரமணியனின் கால்நடை வைத்தியம்

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி தாலுகா, சீதாராமன்பட்டிணத்தில் திரு. தட்சிணாமூர்த்தி வசித்து வருகிறார். இவர் சுமார் 200 செம்மறி ஆடுகள் வைத்து பராமரித்து வருகிறார். இவரின் ஆடுகளை காரைக்குடியைச் சேர்ந்த திரு. சுப்ரமணியன் என்பவர் மேய்த்து வருகிறார். இவர் ஆடுகளுக்கு சில மூலிகை வைத்தியங்களை தாமே செய்கிறார். இவர் இதனை தன் தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டார்.

கழிச்சலுக்கு

ஆடுகளுக்கு கழிச்சல் ஏற்பட்டால் வேரில்லா கொத்தான் அரைத்து உள்ளே கொடுத்தால் கழிச்சல் சரியாகும். அல்லது மோரில் மஞ்சள் தூள் கலந்து 100 மி.லி குடிக்கக் கொடுத்தால் கழிச்சல் குணமாகும். அல்லது பிஞ்சு தென்னம்பாளை அரைத்து 100 மி.லி நீரில் கலந்து கொடுக்க கழிச்சல் குணமாகும். இவற்றை கழிச்சல் நிற்கும் வரை கொடுக்க வேண்டும்.

வாய்க்காணைக்கு

முடக்கத்தான் இலையை அரைத்து அதனுடன் 10 மி.லி. நல்லெண்ணெய், 10 மி.லி. வேப்பெண்ணைய் சேர்த்து மோரில் கலந்து 3 வேளை குடிக்கக் கொடுத்தால் வாய்க்காணை குணமாகும்.

தாடைவீக்கத்திற்கு

ஓமம் –10 கிராம், சீரகம்– 10 கிராம், பெருங்காயம் – 10 கிராம், வெற்றிலை 2, சின்ன வெங்காயம் 5 வேக வைத்து நன்கு கடைந்து 3 வேளை உள்ளே கொடுக்க தாடை வீக்கம் குணமாகும்.

உப்பிசத்திற்கு

மோரில் மஞ்சள் தூள் கலந்து 100 மி.லி 3 வேளை குடிக்கக் கொடுத்தால் குணமாகும்.

சளிக்கு

கண்டங்கத்தரி பழம் 3 எடுத்து அரைத்து சுடுநீரில் கலந்து 100 மி.லி. கொடுத்தால் ஆட்டிற்கு சளி குணமாகும்.

சுப்பிரமணியன்
C/o. தட்சிணாமூர்த்தி
சீதாராமன்பட்டிணம், மணமேல்குடி தாலுகா
புதுக்கோட்டை மாவட்டம்

குமணனின் கோழி வளர்ப்பு

கழிச்சல் நோய்க்கு

கோழிகளில் ஏற்படும் கழிச்சல் நோய்க்கு கசகசா 20 கிராம், சீரகம் – 20 கிராம், வெந்தயம் – 20 கிராம், பெருங்காயம் – 5 கிராம், மஞ்சள் – 5 கிராம், மிளகு – 5 இவைகளை மண்சட்டியில் கருக வறுத்து பின் இடித்து தூளாக்க வேண்டும். பின்னர் இதனுடன் சின்ன வெங்காயம் – 6 , பூண்டு – 6, கருப்பட்டி– 50 கிராம் போன்றவற்றை அரைத்து மேற்கூறிய தூளுடன் சேர்த்து தீவனத்துடன் கலந்து 10 கோழிகளுக்கு கொடுக்க கழிச்சல் நின்று விட்டது.

குடற்புழு நீக்கம்

வாழைத்தண்டு – 100 கிராம், தும்பை இலை –20, சீரகம் – 25 கிராம், பூண்டு – 10 பல், இரண்டு முருங்கைக்காயில் எடுக்கப்பட்ட முருங்கைச்சாறு, பாகற்காய் – 3 விருப்பமாக சாப்பிடுவதற்கு கருப்பட்டி – 1/2 கிலோ அளவிற்கு அதில் சேர்க்க வேண்டும். இவை அனைத்தையும் அரைத்து தீவனத்துடன் கலந்து 10 கோழிகளுக்கு கொடுத்ததில் குடற் புழுக்கள் மடிந்து கோழியின் எடை அதிகரித்தது.

நோய் எதிர்ப்பு சக்தி உண்டாக

பொதுவாக கோழிக்கு உடலின் அனைத்து நோய்களுக்கான எதிர்ப்பு சக்தியை உண்டாக்குவதற்கு கீழ்கண்டவாறு தயார் செய்து தினமும் அளித்ததில் இறப்பு சதவிகிதம் குறைந்து கோழிகள் நல்ல முறையில் வளர்ந்தன : சீரகம் – 2 கரண்டி, மிளகு – 1 பருக்கை இவைகளை இடித்து 50 மில்லி தண்ணீரில் கொதிக்க வைக்க வேண்டும். தண்ணீர் 25 மி.லி அளவு வந்தவுடன் வடிகட்டி அதிலிருந்து எடுக்கப்படும் நீரை 10 சொட்டு 100 மில்லி – தண்ணீரில் கலந்து பயன்படுத்தினேன். அதனுடன் சிறிதளவு கருப்பட்டியும் கலந்து கொண்டேன். நோய் தாக்கம் இன்றி கோழிகள் வளர்ந்தன. மேலும் சீரகம் – 50 கிராம், கீழாநெல்லி இலை – 6 கைபிடி, பூண்டு –10 பல், சின்னவெங்காயம் – 50 கிராம், இவைகளை ஒன்றாக அரைத்து தீவனத்துடன் 10 கோழிகளுக்கு கலந்து வாரம் ஒரு தடவை கொடுத்து வந்தால் நோய் தாக்கமின்றி கோழிகள் வளரும். (இராணிகெட் நோய்க்கும் இதனை கொடுக்கலாம்).

கோழிப்பேன்

வசம்பு – 100 கிராம், தும்பை – 4 கைபிடி , மிளகு – 10, மஞ்சள் – 10 கிராம், சோற்றுக்கற்றாழை – 100 கிராம், சீதாபழம் இலை –2 கைபிடி, வேப்பிலை – 4 கைபிடி , இவைகள் அனைத்தையும் நன்றாக அரைத்து இந்த கலவையை 10லிட்டர் நீரில் கொதிக்க வைத்து அதனை 2 லிட்டர் வரும் வரை சுண்ட காய்ச்ச வேண்டும். பின்னர் ஒரு வடிகட்டி மூலம் இக்கரைசலை வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு அடர்கரைசல் என்று பெயர். பெரிய பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து கொள்ள வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 100 மி.லி அடர் கரைசல் என்ற விகிதத்தில் 10 கோழிகளுக்கு பயன்படுத்தினேன்.பின்னர் கோழியை அந்த தண்ணீரில் தலை பாகத்தை தவிர மற்ற அனைத்து பாகங்களும் தண்ணீரில் மூழ்குமாறு வைக்க வேண்டும். பின்னர் கோழியை வெளியில் சிறிது நேரம் வெய்யிலில் விட வேண்டும். பண்ணையில்உள் ஆழ் கூளம் அனைத்தையும் காலி செய்து மேற்கண்ட கரைசலை பண்ணை முழுவதிலும் தெளித்து பின்னர் புதிய ஆழ் கூளத்தை இட்டு கோழியை விட வேண்டும். இவ்வாறு செய்த பொழுது எனக்கு சிறந்த பலன் கிடைத்தது.

கோழி சளிக்கு கோழிகளுக்கு தற்காப்பாக சளியைத் தடுப்பதற்கு இஞ்சி, பூண்டு தலா 5 கிராம் எடுத்து அரைத்து குடிநீரில் கலந்து 10 கோழிகளுக்கு அருந்தச் செய்ய வேண்டும். அதிக அளவு சேர்த்தால் இதனுடைய வாசனையினால் நீர் குடிக்காது.

பி. குமணன், 74, கைலாசநாதர் கோயில் தெரு
நெல்லிக்குப்பம் – 607105, கடலூர் மாவட்டம்
செல் – 9894352218

நன்றி : மூலிகை வழி கால்நடை வைத்தியம் – புண்ணியமூர்த்தி

வாட்டர் ஹீட்டரில் மின் கசிவை தடுக்க

வாட்டர் ஹீட்டரில் பயன்படுத்தப்படும் பைப்பு நீரில் நேரடியாக வைக்கும் சமயம் மின் கசிவு ஏற்பட வாய்ப்புண்டு. இந்த பைப்பை சுற்றி ஆயில் கவர் அமைப்பு ஏற்படுத்தினால் கசிவை நிறுத்தலாம்.

வறுகடலை இயந்திர நாயகன்

ஒரு சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்த தொடக்கக் கல்வி கூட முழுமையாகப் பெறாத ஒருவர், உயர்ந்த இலட்சியமும், தொடர் முயற்சியும், இடையறா கடின உழைப்பும் இருந்தால் செயற்கரிய செயல்களைச் செய்ய முடியுமென்பதற்கு திரு. சண்முகனார் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

கிராமத்தில் இளமை

திண்டுக்கல்லுக்கு தெற்கில் சுமார் எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள எல்லைப்பட்டி என்ற ஊரில் பிறந்தவர் சண்முகம். தந்தை சிறிய விவசாயி.

பெரிய குடும்பம், மழை பொய்த்ததால் வேளாண்மை கை கொடுக்கவில்லை. கடை வருவாயும் சரியாக இல்லை. பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வி கொடுத்துப் பேணி வளர்க்க முடியாத நிலை. வீட்டுத் தலைவியின் கெட்டிக்காரத்தனத்தால் குடும்ப வண்டி தட்டுத் தடுமாறி ஓடிக் கொண்டிருந்தது.

சண்முகம் குடும்பச் சூழலுக்கேற்ப வளர்ந்து கொண்டிருந்தார். அன்னையின் செல்லம். ஆடிப் பாடி, ஓடியாடி விளையாட்டில் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார். முறையான கல்விப் பயிற்சி இல்லை. வலுவான உடல் வளர்ச்சி இயல்பாய் அமைந்தது.

எட்டு வயதில் அம்மாவை இழந்தார். தாயின் இழப்பு பேரிழப்பாயிற்று. தந்தையால் குடும்பத்தைச் செம்மையாகக் கவனிக்க இயலவில்லை.

காலம் ஓடிற்று, சண்முகத்திற்கு 17 வயது ஆன பொழுது, இன்னும் குடும்பத்தைச் சார்ந்து இருக்க முடியாத நிலை. பொருள் தேட வேண்டிய கட்டாயம். உழைப்பு ஒன்றுதான் அவரிடமிருந்த ஒரே சொத்து. வேலை தேடித் திண்டுக்கல் சென்றார்.

திருப்பு முனையான திண்டுக்கல்

அந்தச் சூழலில் சண்முகம் இரத்தினம் என்பவர் நடத்திய வறுகடலைக் கடையில் வேலை கேட்டு நின்றார். அவருக்கு வாட்ட சாட்டமாக, உழைக்கும் திறனோடிருந்த கிராமத்து இளைஞன் சண்முகத்தைப் பிடித்து விட்டது. உடனே வேலையில் சேர்த்துக் கொண்டார். வேலையோ மிகக் கடினமானது. வெந்தணலில் வேக வேண்டும். பெரிய அடுப்பு, பெரு நெருப்பு, விரிந்த இரும்புச் சட்டி, கொட்டிய கடலையை கருகாமல் வறுத்தெடுக்க வேண்டும். கண்பார்த்தால் கை செய்யணும்

என்பதற்கேற்ப வறுகடலை வறுக்கும் கலையைக் கற்றுத் தேர்ந்தார் சண்முகம். அப்பொழுது அவருக்குக் கிடைத்த நாள் கூலி ஒரு ரூபாய் இரண்டணா. அவர் விரைந்து தொழிலைக் கற்றுக் கொண்டதைப் போன்றே, மற்றவர்களோடு இனிமையாய்ப் பழகும் பண்பையும் கற்றுக் கொண்டார். இதனால் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களிடம் நல்ல தொடர்பு ஏற்பட்டது.

அடுத்த முயற்சி: அடிப்படை வளர்ச்சி

ஊதியம் பெற்று நான்காண்டுகள் உழைத்து தொழில் கற்றிருந்த நிலையில் சொந்தமாகத் தொழில் செய்ய ஒரு வாய்ப்புத் தேடி வந்தது. கடைக்கு வரும் வாடிக்கையாளர்களில் ஒருவரான பல்லவெட்டு ராவுத்தர், அவர் தனியாக தொழில் நடத்த வேண்டி முதலைத் தர முன் வந்தார். தனியாக பொரி அடுப்பு போட்டு சண்முகம் தொழிலைத் தொடங்கினார்.

தேடி வந்து பெண் கொடுத்தார்கள். திருமணம் ஆனது. குறைந்த ஆதாயமே கிடைத்தாலும் குறைவின்றி தொழிலை திறம்பட நடத்தினார். ஆனால் நாட்டில் ஏற்பட்ட அரசியல் பொருளாதாரச் சூழல் வறு கடலைத் தொழிலைப் பாதித்தது. நாட்டில் பங்கீட்டு முறை வந்தது. சண்முகமும் செய்தொழிலில் சூழ்நிலைக்கேற்ப மாற்றம் செய்தார். சோழவந்தானில் பொரிகடலைக் கடை நடத்தினார். சந்தைகளுக்கு மாட்டு வண்டியில் பொரி கொண்டு சென்று விற்றார். இவை எல்லாம் இடைக்காலப்பணிகள்.

நிலைமை சீரானவுடன் மறுபடியும் திண்டுக்கல்லில் பொரிகடலைக் கடையைத் தொடங்கினார். தொழில் வளர்ந்தது. அவரது கவனம் வறுகடலைத் தொழிலில் இருக்கும் உழைப்பாளி படும் பாட்டில் கால் பதித்தது. சில தொழிலாளிகளுக்கு அனல் அடித்து அடித்து கண் தெரியாமல் போய்விடும். கொஞ்ச நாளிலேயே டி.பி.வியாதியும் வந்துவிடும். இந்த மாதிரி அனலில் நின்று கடலை வறுத்தவங்க 60 வயசு. 70 வயசுன்னு இருந்ததாகத் தெரியவில்லை. 40,45 வயசிலேயே கூட சிலர் இறந்து விட்டார்கள். சண்முகம் பிள்ளையும் நெஞ்சு வலியால் அல்லற்பட்டிருக்கின்றார். ஆதலால் அவருக்கு தொழிலாளர் படும்பாடு நன்றாகத் தெரியும். தொழிலாளியை இந்தத் துயரத்திலிருந்து விடுவிக்க விரும்பினார். அதற்கான தீர்வு பற்றித் தீவிரமாகச் சிந்தித்தார்; செயல்பட்டார்.

பெரும்பாலும் கண்டு பிடிப்புகள் தேவையின் அடிப்படையில் தோன்றியவையே.

புதிய கண்டுபிடிப்பிற்கு ஆர்வமும் விடா முயற்சியும் திண்ணிய எண்ணமும் தேவை. இவை எல்லாம் பெற்றிருந்த சண்முகம் ஒரு வறுகடலை எந்திரத்தை உருவாக்க ஊக்கமுடன் முயன்றார். மூன்றாண்டு ஆராய்ச்சி தொடர்ந்தது. நண்பர்கள், பிள்ளைகள் துணை நின்றனர். ஒரு புதிய எந்திரத்தை, எண்ணத்தில் இருப்பதை செயல்வடிவில் கொண்டு வருவது எளிதல்ல. அந்த அரிய செயலை செய்து முடித்தார். பெரிய எந்திரம் உருவானது. முதல் முறையாக கடலையை வறுத்த பொழுது வெப்பத்தைக் கட்டுப்படுத்தவில்லை. அதன் விளைவு பருப்புகள் கருகின. பெரும் இழப்பு. மற்றவர்களாக இருந்தால் சோர்ந்து விடுவார்கள். ஆனால் சண்முகம் சோர்ந்து விடவில்லை. மனைவி துணை நின்றார். கடனை அடைத்தார். முயற்சி தொடர்ந்தது.

வெற்றியும் வளர்ச்சியும்

அவர் எந்திரத்தைச் செம்மைப்படுத்தினார். வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறை கண்டார். லீக்கோ காரியை ஏரி பொருளாகப் பயன்படுத்தினார். சண்முகம் '' ஆட்டோ ரோஸ்டர்'' என்ற பெயரில் அவரது எந்திரம் எங்கும் பரவியது. சண்முகத்தின் முயற்சி எந்திரத்தைக் கண்டு பிடிப்பதோடு நின்று விடவில்லை. தொழில் முயல்வோரானார். கடலை வறுக்கும் எந்திரங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தார். தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா முழுவதும் அவரது எந்திரங்களைக் கேட்டு வாங்கிப் பயன்படுத்தினர்.

அவரது எந்திரம் பொரிகடலையை மட்டுமின்றி நிலக்கடலை, பட்டாணி, உப்புக்கடலை, துவரம்பருப்பு, புளியங்கொட்டை என்று பலவற்றையும் அரைக்கப் பயன்பட்டதால் அதனுடைய தேவை பெருகியது.

மத்திய, மாநில அரசுகளில் பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றார். வாழும் காலத்திலேயே பெயரும் புகழும் பெற்ற சாதனையாளர் அவர். சண்முகத்திடம் பள்ளிக் கல்வி கற்காவிட்டாலும் ஆய்வு மனமும், ஆர்வமும், உழைப்பும் இருந்தன. ஓயாத உழைப்பால் உச்சம் தொடலாம் என்பதற்கு அவரது வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு : வழிகாட்டி.

உழைப்பாளியான அவருக்கு நல்ல வாழ்க்கைத் துணையாக பார்வதி அமைந்தார். குடும்பம் அன்பின்

ஊற்றுப் பெருக்காய் அமைந்தது. நான்கு ஆண்கள், நான்கு பெண்கள் என எட்டுப் பிள்ளைகளைப் பெற்றுப் பெருவாழ்வாய் அமைந்தது அவர்கள் குடும்பம்.

நட்பைப் பேணி வளர்த்தவர் அவர். அவரது பணிகளுக்கெல்லாம் நண்பர்களின் வழிகாட்டுதலைப் பெற்று முன்னேற்றப் பாதையில் சென்றவர் அவர்.

அவரது எளிமையான வாழ்க்கை முறை போற்றத் தக்கது. ஆடம்பரமாக ஆடை அணியாதவர். கையில் கடிகாரம் கூடக் கட்டுவதில்லை.

அவரிடமிருந்த மற்றொரு பண்பு தோல்விகளைக் கண்டு துவளாமை. இழப்புக்கள் ஏற்பட்ட போதும் தனது நிலை குலையாமை. உள்ளார்ந்த நம்பிக்கையோடு உழைத்தது அவரை மென்மேலும் உயர்த்தியது. அவரது உழைப்பில் சமுதாய நோக்கமிருந்தது. அது கண்டுபிடிப்புகளாக மணம் பரப்பியது.

நன்றி : சர்வோதயம் மலர்கிறது – மார்ச் 2019

கிருஷ்ணசாமியின் மூலிகை வைத்தியம்

நம் வேளாண்மை பருவம் :27, இதழ் : 4 ல் (ஜனவரி – மார்ச் 2018) பக்கம்: 17ல், கிருஷ்ணசாமியின் மூலிகை வைத்தியம் பற்றி பிரசரித்திருந்தோம். இவர் கடைபிடிக்கும் மூலிகை வைத்தியத்தில் மூலிகை பொருட்களின் அளவுகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

மசால் உருண்டை தயார் செய்தல்

கால்நடைகளுக்கு குறிப்பாக மாடுகளுக்கு மசால் உருண்டை போடுவதால் வயிறு உப்பிசம், தீனி திண்ணாமை, நீர் குடிக்காமை, மாசி போடாமல் இருத்தல் போன்ற பிரச்சனைகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். இதில் ஆவாரம் இலை – 1 கிலோ, நிலவாகை இலை – 1 கிலோ, கொளுஞ்சி – 1 கிலோ, தும்பைஇலை – 1 கிலோ , கொல்லங்கோவைகிழங்கு– 1/2கிலோ,சோற்றுக்கற்றாழை–1கிலோ, புளியம் பிரண்டை– 1 கிலோ, பெருந்தும்பை – 1 கிலோ, சிறுந்தும்பை – 1 கிலோ, பிரண்டை – 1 கிலோ போன்றவற்றுடன் கடை சரக்கு சுக்கு– 300 கிராம், மிளகு– 200 கிராம் , திப்பிலி– 200 கிராம் , சீரகம்– 200 கிராம் , வேப்பெண்ணெய்– 1/2 லிட்டர் , தேங்காய்–2 , சிறு வெங்காயம்– 1 கிலோ , பூண்டு– 1/4கிலோ உப்பு – 1/2 கிலோ சேர்த்து அரைத்து உருண்டை பிடித்து தர வேண்டும்). மேற்கூறிய அனைத்தையும் ஒன்று சேர்த்து அரைத்து உருண்டையாக பிடித்து மஞ்சள் தூளில் துவட்டி மாடு ஒன்றுக்கு 2 உருண்டை (1 உருண்டை 1/4 கிலோ) கொடுத்து வந்தால் மாட்டின் வயிற்றில் உள்ள வயிற்று பூச்சி ரோமம் பிளாஸ்டிக் அனைத்தும் வெளியேறி வந்து விடும்.

இதனை குறைந்தது 6 மாதத்திற்கு ஒரு முறையாவது கொடுக்க வேண்டும்.

மாடுகளுக்கு நாக்கின் அடிப்பகுதியில் உள்ள பச்சை நரம்பின் முனை பகுதியை குத்தி விட வேண்டும் . இதனால் கெட்ட இரத்தம் இறங்கும். மூட்டில் நீர் கட்டாது.

மூட்டுவலி தைலம்

வேப்பெண்ணெய்– 1/2 லிட்டர், இலுப்பை எண்ணெய்–1/2 லிட்டர், புங்கை எண்ணெய்– 1/2 லிட்டர், தேங்காய் எண்ணெய்– 1/2 லிட்டர் , விளக்கெண்ணெய்– 1/2 லிட்டர் சேர்த்து இதில் கஸ்தூரி மஞ்சள்– 200 கிராம், கருஞ்சீரகம்– 200 கிராம், பெருஞ்சீரகம்– 200 கிராம், திப்பிலி– 200 கிராம், ஓமம் – 200 கிராம், ஆடாதொடை வேர் – 300 கிராம், முடக்கத்தான் வேர் – 300 கிராம் திருநீற்று பச்சிலை வேர் – 300 கிராம், ஆடு தின்னாபாலை வேர் – 300 கிராம் மேற்கண்ட அனைத்து வேர் மற்றும் பலசரக்கு பொருள்களை மேற்கண்ட எண்ணெய் கலவையில் 3 நாள் ஊற வைக்க வேண்டும் அதன் பின் வாணலியில் விட்டு காய்ச்ச வேண்டும். 2,3 மணி நேரம் வரை சூடு பண்ண வேண்டும். பொங்கி விடாமல் பார்த்து கொண்டு சூடேற்ற வேண்டும். தொடர்ந்து 3 நாள் சூடு பண்ண வேண்டும். கிடைத்த எண்ணெயை குளிர்வித்து வலியுள்ள இடங்களில் தேய்த்து வர மூட்டு வலி நீங்கும்.

கூந்தல் தைலம்

தேங்காய் எண்ணெய்–1/2 கிலோ ஆடு தின்னாபாலை– 1/4 கிலோ , சோற்றுக்கற்றாழை– 1/4 கிலோ, செம்பருத்தி இலை – 1/4 கிலோ கற்றாலை சோறு – 1/4 கிலோ சுத்தம் செய்யப்பட்ட இலைகளை தேங்காய் எண்ணெயில் ஊற வைத்த 3 நாள் கழித்து தேய்த்து வர தலையில் உள்ள பூச்சி வெளியேறவும் தலை குளிர்ச்சி பெறும். முடி உதிர்வது நின்று விடும்.

குடற்புழு, விஷக்கடிக்கு

கொல்லங்கோவை கிழங்கு தூளாக்கி தர வேண்டும்.

கிருஷ்ணசாமி
த/பெ, சோனை முத்து, 261/2 414, அம்பேத்கார் காலனி காமாட்சிபுரம், சீப்பாங்க் கோட்டை
தேனி மாவட்டம் – 625520, செல் :9487390760

கால்நடை ஊக்குநர்களின் அனுபவம்

மஹாராஷ்ட்ரா மாநிலம், உஸ்மனாபாத் மாவட்டத்தில் கால்நடை ஊக்குநர்களாக பணியாற்றி வருகிறோம். மகளிர் குழு உறுப்பினர்கள் வைத்து இருக்கும் கால்நடைகளுக்கு குறிப்பாக ஆடுகளுக்கு மசால் உருண்டை, அடர்தீவனம், தாதுப்பு கட்டி, வேப்பஎண்ணெய் தைலம் போன்றவைகளை தயார் செய்து விநியோகித்து வருகிறோம். கடந்த 3 ஆண்டுகளுக்கு மேல் இவைகளை தயார் செய்து கொடுத்து வருகிறோம். இதனால் கால்நடைகளுக்கு ஆகும் மருத்துவ செலவு கணிசமாக குறைந்து உள்ளது. நாங்கள் தயாரிக்கும் கால்நடை தாதுப்பு கட்டியில் கீழ்கண்ட பொருட்களை சேர்த்து தயாரிக்கிறோம்.

கால்நடை கட்டி

கோதுமை தவிடு –250 கிராம், முல்தானிமட்டி– 150 கிராம், சுண்ணாம்பு – 100 கிராம், வெல்லம் – 200 கிராம், மினரல் மிக்சர் – 50 கிராம், இந்து உப்பு – 100 கிராம், கடலை பிண்ணாக்கு – 150 கிராம்.

கால்நடை தீவனத்தை தயாரிக்க கீழ்க்கண்ட பொருட்களை சேர்க்கிறோம்.

கால்நடை தீவனம்

மக்காச்சோளம் – 1 கிலோ, கம்பு – 1 கிலோ, கடலைபிண்ணாக்கு – 1 கிலோ, மினரல்மிக்சர் – 50 கிராம், உப்பு – 50 கிராம், சோயா பீன்ஸ் – 1 கிலோ.

Pravin Akhtar Pathan
At, Jhanpur Post, Pangri, Tel, Barshi,
District Solapur- 413404. Maharashtra.

வாசகர் வட்டம்

படுத்த மாடு எழுந்து நடக்க

மாட்டிற்கு மருத்துவர்களால் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது மாட்டை வெட்டுக்கு அனுப்பு என்று சொன்ன மாடுகள் எழுந்து நின்று நடந்த அதிசயம் எங்கள் வீட்டில் நடந்தது. நானும் எந்த ஊதியமும் பெற்றுக் கொள்ளாமல் கால்நடைகளுக்கு செய்யும் புண்ணியமாக நினைத்து அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன்.

தழுதாளை, முடக்கத்தான், வாதநாராயணன், மஞ்சள் கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி, நொச்சி, வேலிபருத்தி, மூங்கில் இலை, கற்பூரவள்ளி, தீருநீற்று பச்சை, குப்பைமேனி, உசிலைஇலை, கருஞ்சீரகம், சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், சுக்கு, திப்பிலி, மிளகு, பூண்டு, ஓமம், பெருங்காயம், சின்னவெங்காயம். இவை அனைத்தும் அரைத்து கருப்பட்டியுடன் சோற்று கற்றாழையுடன் சேர்த்து உள்ளுக்கு கொடுத்ததில் மூன்றே நாளில் தானாகவே பசு எழுந்து நடக்க தொடங்கி விடுகிறது. இது மயில்சாமி அவர்களின் அனுபவமும் அயோத்தியாபட்டிணம் கோவிந்தன் அவர்களது முறைகளையும் இணைத்து சிறிது தேவையானதை சேர்த்து சோதித்தேன். நல்ல பலன் கிடைக்கவே மிக குறுகிய காலத்தில் ஐம்பது மாடுகளுக்கு மேல் காப்பற்றப்பட்டது. தங்களது வழி காட்டலும் எங்களுக்கு பேருதவியாக இருந்தது.

வெளிப்பூச்சாக வேப்ப எண்ணெய் இரும்பு வாணலியில் சூடுபடுத்தி நொச்சி, வெள்ளை எருக்கம் பூ இடித்து துணியில் கட்டி இதனுடன் குப்பைமேனி, உத்தாமணி இடித்து சாறு சேர்த்து காய்ச்சி பூச பலன் கிடைத்தது.

K. பூக்கடை செல்வம் , மலர் வியாபாரம்,
பழைய பேருந்து நிலையம்,
கச்சிராயபாளையம்– 606207,வடக்கநந்தல் அஞ்சல்,
சின்னசேலம் தாலுகா, கள்ளக்குறிச்சி மாவட்டம்,
செல் : 9789412876

வறட்சிதாங்கும் பூங்காரு நெல்

பூங்காடு என்ற பாரம்பரிய நெல் ரகத்தை நட்டிருந்தோம். நட்டதிலிருந்து நீர் பற்றாக்குறையினால் நெல்லுக்கு நீர் பாய்ச்ச முடியவில்லை. 50 நாட்களுக்குப்பின் பெய்த மழையினால் கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சினேன். பயிர் கருகாமல் மீண்டும் தழைத்து பால் பிடிக்கும் தருணத்தை எட்டிவிட்டது. இது 90 நாட்கள் பயிராகும்.

சீரகசம்பா நெல்லில் அதிவிளைச்சல்

சிரகசம்பா நெல்லை 50 சென்ட் நிலத்தில் பயிரிட்டேன். இதற்கு எந்த இரசாயன உரமில்லாமல் இயற்கையாக பயிர் செய்தேன். 1440 கிலோ எடுத்துள்ளேன். எங்கள் தோட்டத்தில் வாய்க்கால் நீரை நிலத்திற்கு பாய்ச்சு முன் ஒரு கிடங்கு (பள்ளம்) வழியாக செல்லுமாறு செய்துள்ளேன். இதில் சாணம், கோமியம், எருக்கலை, ஆவாரம், சோற்று கற்றாழை, கொளுஞ்சி, வேப்ப

இலையை ஊறவிட்டு புளிக்கவிடுவேன். இதன் வழியாக செல்லும் வாய்க்கால் நீர் இயற்கை உரத்தையும் எடுத்துக் கொண்டு செல்கிறது. இது தவிர மேலுரமாகவோ எதுவும் கொடுக்கவில்லை.

பிச்சைமுருகன்

அச்சன்குளம் ஸ்ரீவில்லிபுத்தூர் (வழி)

விருதுநகர் மாவட்டம். செல் : 9362794206

(பிச்சைமுருகனின் இயற்கை வேளாண்மை உத்திகள் பருவம் 27 இதழ் 2 ல் ஜூலை – செப்டம்பர் 2017 ல் வெளியிடப்பட்டுள்ளன – ஆசிரியர்).

மாடி தோட்டம்

முள்ளங்கி விதை சின்ன தொட்டி அல்லது பெரிய தொட்டிக்கு 2 விதை என 12 விதைகள் போட்டால் 12 முள்ளங்கி முதல் 15 முள்ளங்கி வரை வரும். இதே போன்று இன்னொறு தொட்டியில் கீரை விதைகள் தெளித்து 1 மாதத்தில் நமது வீட்டிற்கு தேவையான காய்கறிகள் +(பறங்கி விதை + பூசணி விதை) போட்டால் மிகவும் சுலபமாகவும் வெளியில் பணம் கொடுத்து காய்கறிகள் வாங்கும் சூழல் இருக்காது. இதனை எந்த மாதத்திலும் எப்போது வேண்டும் பயிர் செய்யலாம். காரட் + பீட்ரூட் + பீன்ஸ்+ கொத்தவரங்காய் போன்றவை நமது வீட்டு மாடி தோட்டத்தில் பயிர் செய்யலாம். சிறிய முதலீடு வெறும் ரூ.10 ல் இருந்து ரூ. 15 தான் செலவாகும். கிடைப்பது 3 மாதத்திற்கு உண்டான காய்கறிகள் 100 சதுர அடியில். இத்தனை காய்கறி கீரைகளை பயிர் செய்து நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம். அனைத்தும் நீர் சத்து + சாம்பல் சத்து மற்றும் இரத்த அணுக்கள் உற்பத்தி செய்யக் கூடிய கத்தரி நம் உடலுக்கு தேவையான சக்திகளை நாம் நமது வீட்டில் இருந்தே பெற்றுக் கொள்ளலாம். செடி முருங்கை இந்த தொட்டியில் போட்டு பயிர் செய்யலாம். முருங்கை கீரை நமது உடலுக்கு அதிகமான இரத்த அணுக்களை உற்பத்தி செய்யக் கூடியது. அனைவரும் இதனை செய்து தங்களது தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொள்ளலாம். கீரைக்கு உரம் எதுவும் தெளிக்க கூடாது. தெளித்தால் கீரை கசக்கும்.

பரங்கிக்காய் சாகுபடி

பரங்கிக்காய் விதை போட்டு ஒரு மாதத்தில் காய்த்தது. இந்த காய் 1 கீத்து ரூ. 10க்கு ஒரு பரங்கிக்காய் சுமார் ரூ. 120 ல் இருந்து ரூ. 140 வரை விற்றேன். வீட்டிற்கு தேவையான சிறிய காய்களை வைத்துக் கொண்டு 14 காய்களை விற்று விட்டேன். மீதம் 10 காய்கள் பெரிதாக வளர்ந்து கொண்டுள்ளன. இயற்கை உரம் தான் என்னவென்றால் மாட்டு சாணம், ஆட்டு புழுக்கை சிறிது வேப்பம் புண்ணாக்கு தான் இட்டேன். நாம் பயிரிடும் முறை சிறிதும் அலட்சியம் இல்லாமல் செய்தால் நாம் சிறந்த விவசாயியாக வலம் வரலாம். கடனில்லா வாழ்வு என்பது இன்றைய கால கட்டத்தில் மிகவும் சிரமம். அதை நாம் கண்ணும் கருத்துமாக செய்யும் போது நன்றாக சம்பாதிக்கலாம்.

நா. தனசேகரன்

2/41 அக்ரஹாரம், சூலமங்கலம், பசுபதிகோவில்

அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம். செல் :9715109946

இயற்கை காய்கறி விற்பனை

வேலுச்சாமியின் இயற்கை காய்கறி விற்பனை பற்றி நம் வழி வேளாண்மை பருவம்– 28 இதழ் – 2 பக்கம் – 14 ஜூலை – செப்டம்பர் 2018 ல் பிரசரித்திருந்தோம். அவருடைய முகவரி மற்றும் தொலைபேசி எண் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வேலுச்சாமி,

தண்டுக்காரம் பாளையம் அஞ்சல்

சோலையூர்வழி, அவிநாசி தாலுகா,

திருப்பூர் மாவட்டம் – 641655

செல் – 9842553068, 9942375441

மாட்டு மடி வீக்கத்திற்கு

ஒரு பால்மாடு வாங்கி வந்தேன். இது ஜெர்சி கலப்பினபசு. 2 வது கீத்து மாடு பால் சுமார் 10 லிட்டர் தருகிறது. மடி வீக்கத்துடன் இருந்தது. மடி கல்போன்று கட்டியாக இருந்தது. மாடு ஈன்று 2 வாரங்கள் தான் ஆகியிருந்தது. கர்ப்பப்பை சுத்தமில்லாமலிருப்பதுதான் இந்தக் கோளாறு வருகின்றது என எண்ணி சில எலுமிச்சம்பழங்களை எடுத்து சாறு பிழிந்து சாக்பீஸ் தூளுடன் கலந்து மடியில் பூசி வந்தேன். 2 நாட்கள் தடவி வர கிட்டதட்ட முழுதும் குணமாகிவிட்டது. உள்ளே பனங்கருப்பட்டி 1/4 கிலோ எடுத்து எள்ளு பிண்ணாக்கு 1/2 கிலோ 1/2 கிலோ பருத்தி கொட்டை, பச்சரிசி 1 படி சேர்த்து அவித்து வேக வைத்து மாட்டுக்கு தின்னக் கொடுத்தேன். இதனால் மாட்டிற்கு உள்புறமுள்ள கசடுகள் வெளி வந்து விட்டது. மடி வீக்கமும் இல்லை.

நாடியம்மாள்

கிருஷ்ணாஜிபட்டணம், மணமேல்குடி (வழி)

புதுக்கோட்டை மாவட்டம். செல் :9688347775

சித்து வெடக்கோழி வளர்ப்பு

என்னிடம் சித்துவெடக்கோழி என்னும் நாட்டுரகம் 100 வைத்துள்ளேன். எனக்கு 8 ஏக்கர் தோட்டமும் உள்ளது. வீட்டுத் தோட்டத்தில் கோழிவளர்ப்பவர்கள் வாழை நட்டால் முதல் 2 மாதங்கள் வாழையைப் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் வாழைக்குருத்தை கோழி கொத்தி தின்று விடுமாதலால் கோழிகளை அடைத்து வைக்க வேண்டும். அல்லது வாழைக்கு இரும்பு வலை போட்டு 4 அடி உயரம் வளர்ந்தபின் கோழிகளை சுதந்திரமாக மேயவிடலாம். வாழை மரங்களுக்கு நடுவே உள்ள களைச்செடி, அருகம்புல் போன்றவை (பூடு புல் மட்டும் சாப்பிடாது) அனைத்தையும் மேய்ந்துவிடும். இதனால் தோட்டம் வைத்திருப்பவர்கள் நாட்டு கோழி வளர்த்தால் களையெடுப்பு செலவு மிச்சமாகும். அதாவது 50 சதம் களையெடுப்பு செலவு குறையும். கரும்பு பயிர் நட்டால் நடவு ஆரம்பத்திலிருந்தே கோழிகளை சுதந்திரமாக மேய விடலாம். கரும்புக்கு எந்த பாதிப்பும் வராது. புழு, பூச்சிகளையும் கட்டுப்படுத்தும். ஒருங்கிணைந்த கால்நடை வேளாண்மை பண்ணையை தகுந்த அணுகுமுறையுடன் கொண்டு சென்றால் உரச்செலவு, களையெடுப்பு செலவைக் குறைக்கலாம்.

வெயில் உஷ்ணத்தினால் வரும் கோழிகழிச்சலுக்கு சோற்றுக்கற்றாழை 1 கிலோ, சின்ன வெங்காயம் 1/2 கிலோ. பூண்டு 1/2 கிலோ, மிளகு 100 கிராம் கரிசலாங்கண்ணி 1 கிலோ சேர்த்து அரைத்து 100 கோழிகளுக்கு கொடுக்கிறேன். இதனால் வெயில் உஷ்ணத்தினால் வரும் கழிச்சல் குறைந்துவிடும். இரவில் கூண்டில் ஒரே கோழிகள் அடைத்தால் நல்ல காற்றோட்டம் இருக்காது. இதற்காக மரத்திலேயே ஏறி அடைய பழக்கப்படுத்தியுள்ளேன். தோட்டத்தில் உள்ள வாழைப்பூவை நறுக்கி தீவனமாகவும் தருகிறேன்.

ந. மோகன்ராஜ்
ராஜா போயன் தோட்டம், சத்தியமங்கலம்– 638401
செல் : 9965990756

பேன், உண்ணிகளுக்கு

பேன் உண்ணி தைலத்தை (வேப்பஎண்ணெய் 100 மி.லி கந்தகத்தூள் 10 கிராம், சூடம் 10 எடுத்து தூள் செய்து கலந்தது) பக்கத்துவீட்டு அந்தோணியம்மாள் ஆடுகளுக்கு காதில், உடம்பில் தேய்த்து விட்டேன். இதனால் பேன், உண்ணிகள் முற்றிலும் உதிர்ந்து விட்டன. இந்த மருந்தை கொடுக்குமுன்னர் ஊருக்கருகிலுள்ள கடல்நீரில் முக்கி எடுத்தோம்.

மீனா
கோட்டைபட்டிணம், மணமேற்குடி
புதுக்கோட்டை மாவட்டம்.

22ம் பக்கத்தின் தொடர்ச்சி

விஷக்கடிக்கு

நிலவேம்பு, மிளகு,வேப்பமரப் பட்டை, சிறுபீளை, தும்பை சேர்ந்தது. மாட்டுக்கு –30 கிராம், ஆட்டுக்கு – 15 கிராம். ஒரு நாளைக்கு 1 வேளை கொடுக்க வேண்டும்.

புண், காயம் தைலம்

ஊமத்தை இலை, தேங்காய் எண்ணெய், மயில்துத்தம் சேர்ந்தது. புண், காயம் மேல் பூசி வர வேண்டும்.

பேன் , உன்னி தைலம்

புங்கை எண்ணெய், கற்பூரம், கந்தகம் சேர்ந்தது. இதை மேல் பூச்சாக பூச வேண்டும்.

சுவாச நோய்க்கு

கண்டங்கத்தரி, ஆடாதொடை, மிளகாய் பழம் சேர்ந்தது. மாட்டிற்கு –20 கிராம், ஆட்டிற்கு – 10 கிராம் சுடு நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

கரித்தூள்

விஷக்கடி, விஷச்செடி தின்றால் கரித்தூள் மாட்டிற்கு – 50 கிராம், ஆட்டிற்கு –25 கிராம் பாலில் கலந்து கொடுக்க வேண்டும். மாட்டுக்கு – 2 லிட்டர் பசும் பால், ஆட்டுக்கு 1 லிட்டர் பாலில் ஒரு நாளைக்கு ஒரு வேளை கொடுக்க வேண்டும்.

கால்நடை மூலிகை வைத்திய முதலுதவி பெட்டி விலை ரூ.300 க்கு கொடுக்கப்படுகிறது.

கால்நடை முதலுதவி பெட்டி அனுபவங்கள்

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி, ஆவுடையார்கோயில் வட்டாரங்களில் மகளிர் கால்நடை ஊக்குநர்களுக்கு ஆடு வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. சேவா தொண்டு நிறுவனம் மூலம் இப்பயிற்சி தரப்பட்டது. பயிற்சியில் பங்கு பெற்ற உறுப்பினர்களுக்கு கால்நடை மூலிகை முதலுதவிப் பெட்டி வழங்கப்பட்டன. இதில் 7 வகை நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மூலிகை பொருட்கள் உள்ளன. இந்தப்பெட்டி மூலிகை பொருட்களை பயன்படுத்திய அனுபவங்கள் 25.2.2019 அன்று நடைபெற்ற மகளிர் கால்நடை ஊக்குநர்கள் கூட்டத்தில் தொகுக்கப் பட்டன.

நாய்க்கடிக்கு

எங்கள் தெருவில் ஓர் ஆட்டை நாய் கடித்து விட்டது. இந்த ஆட்டிற்கு கரித்தூளை பாலுடன் கலந்து கொடுத்தேன். ஆட்டிற்கு நீர் பிரிந்து குணமானது.

– போதும் பொன்னு, கீழமஞ்சன்குடி

கழிச்சலுக்கு

எங்கள் ஆடுகளுக்கு கழிச்சல் காணப்பட்டது. இதற்கு திரிபலாசூரணம், சுக்கு கலந்து கொடுக்க குணமானது.

– ரேகா, அம்மாபட்டிணம்

விஷக்கடிக்கு

ஆட்டிற்கு விஷக்கடியினால் ரோமம் இல்லாத தழும்பு இருந்தன. இதற்கு பேன், உன்னி தைலம் (புங்கஎண்ணெய்யுடன் சூடம், கந்தகம் கலந்து) தடவி வந்தேன். பின்னர் புதிதாக ரோமம் முளைக்க ஆரம்பித்து விட்டது.

– மீனா, கோட்டைபட்டிணம்

மூக்கடைப்பு

செம்மறி ஆடுகளுக்கு மூக்கிலிருந்து சளி வந்து கொண்டிருந்தது. இது சுவாச நோயாக இருந்ததால் கண்டங்கத்திரி, சுண்ணாம்பு, மிளகாய் பழம் சேர்த்து அரைத்து உள்ளே தர குணமானது.

– தயாநிதி, மும்பாலை

கோழி கழிச்சலுக்கு

இஞ்சி, பூண்டு, பட்டவத்தல், கீழாநெல்லி சேர்த்து அரைத்து நீரில் 2 மணி நேரம் ஊற வைத்து கோழிகளுக்கு கொடுக்கப்பட்டது. இதனால் கோழி கழிச்சல் நின்று விட்டது.

– இராஜேஸ்வரி, குமரப்பன்வயல்

ஆட்டு புண்ணுக்கு

மத்தான் தைலம் (ஊமத்தை இலைச் சாறு, தேங்காய் எண்ணெய் கலந்தது) தடவி வர ஆட்டு புண் குணமானது.

– சாந்தி, குமரப்பன் வயல்

வயிறு உப்பிசம்

ஆடு வயிறு உப்பிசத்தால் தீவனம் எடுக்காமல் இருந்தது. இதற்கு திரிபலா சூரணம் 10 கிராம், சோடாஉப்பு 10 கிராம் கலந்து கொடுத்தேன். கொடுத்த 3 மணி நேரத்தில் அசைபோட ஆரம்பித்தது.

ஆட்டு பேனுக்கு

ஆட்டு பேனுக்கு பேன் மருந்து (புங்கஎண்ணெய், கந்தகம், சூடம் கலந்தது) எங்கள் 5 ஆடுகளுக்கும் கைகளில் தடவி ஆடுகளுக்கு தேய்த்து விட்டேன். தற்பொழுது பேன், உன்னிகள் உதிர்ந்து விட்டன.

– வித்யாமோரி, பாதரக்குடி

மாட்டு கொம்பு புண்ணுக்கு

மாடு கொம்பு ஒடிந்த ஏற்பட்ட புண்ணிற்கு மத்தான் தைலம் போட்டு வர குணமானது.

–இராஜேஸ்வரி, குமரப்பன் வயல்

ஆட்டு காய்ச்சலுக்கு

திரிகடுகுசூரணத்தை சுடு நீரில் கலந்து தர ஆட்டு காய்ச்சல் குணமானது.

அரிசி தின்ற மாட்டிற்கு

திரிபலாசூரணம், சோடா உப்பு கலந்து கொடுக்கப்பட்டது. பின்னர் மாடு அசை போட ஆரம்பித்தது.

– கஸ்தூரி, குமரப்பன் வயல்

கால்நடை மூலிகை முதலுதவி பெட்டியை மகளிர்குழு உறுப்பினர்கள் மூலமாகத் தயாரிக்கப்பட்டு ரூ.300க்கு விநியோகிக்கப்படுகிறது. தேவையானோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

திருமதி. சங்கீதா
C/o ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு
சுனாமிக்கு பிந்தைய வாழ்வாதார திட்டம்
மும்பாலை, மணமேல்குடி (வழி)
புதுக்கோட்டை மாவட்டம்
செல் : 8508437148, 8883247902

அக்டோபர் – டிசம்பர் 2018

நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்

	வருட சந்தா ரூபாய்	ஆயுள் சந்தா ரூபாய்
நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள்	200	2000
விவசாயிகள் / தனிநபர்கள்	150	1500
தனிப்பிரதி	30	----
15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250)	1500	----

\+ (கொரியர் செலவு ரூ. 250)

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடைகிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com

நம் வழி வேளாண்மை 24